Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

23 AUG 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.




நாதம் 15 · திருவள்ளுவர் ஆண்டு 2035 · ஆவணி–07 · 23–08–2004 · திங்கட்கிழமை · ஓசை –187

# இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது குறித்து

# மூன்று முக்கிய நிதி நிறுவனங்கள் ஆராய முடிவு

## அடுத்தமாதம் அமெரிக்காவில் சந்திப்பு

**உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பொருளாதாரத் திட்டங்களிற்கான ஜப்பான் முதலீட்டு வங்கி ஆகியன அடுத்த மாதத்தில் அமெரிக்காவில் ஒன்று கூடி இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதா? இல்லையா? என்பது பற்றி ஆராய விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இலங்கையில் அரசாங்கங்கள் மாறுகின்றபோது ஏற்படுகின்ற பொருளாதாரத் திட்டமாற்றங்கள் முழு மையான முறையில் நாட்டின் வளத்தைப் பாதிக்கக் கூடியதாக வுள்ளது. இவ்வாறான திட்டங் களை மையமாகக்கொண்டு இந்த 3வங்கிகளும் சில ஏற்பாடு களைச் செய்வதற்குத் தீர்மானித் துள்ளன.

இம்மாநாடு கூட்டப்படும்போது இலங்கையில் ஏற்கனவே உலக வங்கி ஐக்கிய தேசியக்கட்சியினூ டாக அறிமுகப்படுத்திய "இலங்கை நாட்டைக் கட்டியெழுப்பு வோம்" என்ற கொள்கையும் அதனைத் தவிர்த்துப் புதிய அரசாங்கம் கொண்டு வந்துள்ள "நாட்டை மாற்று வோம்" என்ற கொள்கைகள் தொடர்பாகவும் இம்மாநாட்டில் ஆராயப் படவுள்ளது. இதனையடிப்படையா கக் கொண்டு அடுத்தகட்ட நகர் வாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக்கு நகரும் புலிகள் பற்றி விபரம் கோருகிறார் சந்திரிகா



கொழும்பு மற்றும் கொழும்பை அண்டியுள்ள பகுதிகளில் தங்கியிருக்கும் விடுதலைப்புலிகள் தொடர்பான தரவுகளை தமக்குப் பெற்றுத்தருமாறு, சனாதிபதி சந்திரிகா, படைத்துறை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு பகுதிகளிலிருந்து தெற்குக்கு நகர்வுகளை மேற்கொள்ளும் விடுதலைப்புலிகள் தொடர்பான பிறிதொரு அறிக்கையைச் சமாப்பிக்குமாறும், அவர் படைத்துறை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், தென்பகுதியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. கடற்பரப்பில்

## மீன்பிடிக்கச் சென்ற இருவரைக் காணவில்லை

முல்லைத்தீவுஅம்பலவன் பொக்கணையில் இருந்து நேற்று முன் தினம் மீன்பிடிப்பதற்காகச் சென்ற மீன்பிடிப்படகு இதுவரை கரை சேரவில்லை. அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த மதன் என்பவரது படகே இதுவரை கரைசேரவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படகில் அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த சுமார் 20 வயதுடைய பாலசிங்கம் லதீபன் ,அதே இடத்தைச் சேர்ந்த 29 வயதுடைய குடும்பஸ்தரான வேலாயுதம்பிள்ளை சிவநேசன் ஆகியோர் சென்றிருந்தனர்.

நேற்றுப் பகல் தேடுதலை மேற்கொண்டபோது பயன் எதுவும் கிட்டவில்லை என படகின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். இவர்கள் பற்றிய தகவல் கிடைத்தால் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்துடன் தொடர்புகொள்ளும்படி அவர்கள் கூறியுள்ளனர். (08)

## பல்கலை மாணவர்,மக்கள் போராட்டத்தினால் இராணுவத்தின் வியாபார நிலையத்துக்கு மூடுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி கலட்டிச் சந்தியில் இராணுவத் தால் நடத்தப்பட்டு வந்த அப்ப வியாபார நிலையம் நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்களும், மக்களும் நடத்திய போராட்டத்தினால் மூடப்பட்டது.

திருநெல்வேலி கலட்டிச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் அண்மைக்காலமாக அப்ப வியாபார நிலையமொன்றினை அமைத்து மாலை நேரத்தில் அப்ப வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தனர். தமிழ் மக்கள் மத்தியில் திட்டமிட்ட கலாசார சீரழிவின் ஊடாக தமிழ் மக்களது போராட்டத்தைச் சீரழிக்கும் ஓர் அங்கமாக இவ்வியாபார நிலையங்களை சிறிலங்கா இராணுவத்தினர் நிறுவி வருகின்றனர். நேற்று மாலை 5.30 மணியளவில் பல நூற்றுக்கணக்கான யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களும், மக்களும் கலட்டிச் சந்தியில் அமைந்துள்ள அவ்வியாபார நிலையத்துக்கு முன்னால் கூடி நின்று தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். சுலோக அட்டைகளை ஏந்தியவாறு மிகவும் அமைதியாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவின்கம்யூனிச கட்சியுடன் ஒப்பந்தம் ஜே.வி.பி அடுத்த மாதம் ஏற்படுத்தும்

சீனாவின் கம்யூனிச கட்சியுடன் ஜே.வி.பி இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளவுள்ளது. இந்த ஒப்பந்தம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் ஜே.வி.பி.யின் தூதுக்குழு சீனா செல்லும் போது செய்து கொள்ளப்படவுள்ளது.

சீனாவில் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகளின் மாநாடு நடைபெறவுள்ளது. இதுவரை காலமும் இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சியே பங்கேற்று வந்தது இந்தத் தடவையே ஜே.வி.பி.ற்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் நந்தன குணதிலக்க ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (32)

## வீரவணக்கம்

25-06-2004அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார். நாட்டுப் பற்றாளர் சீனியப்பா பத்மநாதன் (6ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசவிரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவடைந்த இரு போராளிகளுக்கும் புலிகள் வீரவணக்கம்

மட்டக்களப்பு மாங்கேணியில் கடந்த 20ஆம் திகதியன்று தேசவிரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவடைந்த இரு மாவீரர்களுக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

*.மேஜர் தயாசீலன்/வாவா (செல்வராசா ஜெகதீஸ்வரன் அ.த.க பாடசாலை வீதி, கள்ளியதீவு திருக்கோயில், மட்டக்களப்பு. தமு. சிவன் கோயில் வீதி, விநாயகபுரம், திருக்கோயில் மட்டக்களப்பு)

*.மேஜர் யோகா (நாகலிங்கம் ஜீவராசா, வெள்ளாவெளி மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே தேச விரோதிகளின் தாக்குதலில் வீரச்சாவடைந்துள்ளனர்.

## கோவில் வயலில் 12 மாவீரர் குடும்பங்களுக்கு மாவீரர் செங்கோலனின் தந்தை அன்பளிப்பு

பளை இயக்கச்சி வலயத்தின் கோயில் வயல் கிராமத்தில் உள்ள பன்னிரெண்டு மாவீரர் குடும்பங்களுக்கும், அக்கிராமத்தைச் சேர்ந்த மாவீரர் செங்கோலனின் தந்தையார் பொன்னுத்துரை அவர்கள் ஒரு குடும்பத்திற்கு ரூபா 25000 (இரு பத்தையாயிரம்) விகிதம் பன்னிரெண்டு மாவீரர் குடும்பங்களுக்கும் ரூபா 300,000 (மூன்று இலட்சம்) அன்பளிப்பாக வழங்கியுள்ளார். மேற்படி நிகழ்வில் இயக்கச்சி வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.ரூபன் கலந்துகொண்டார். பொன்னுத்துரை அவர்கள் வலயப் பொறுப்பாளர் ச.ரூபனிடம் கூறும்போது, "தனது மகன் இந்த மண்ணுக்காக மாவீரனாகி உள்ளான். அதுபோன்று தனது கிராமத்திலும் உள்ள பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை மாவீரராகக் கொடுத்துள்ளனர். அப்பெற்றோர்களுக்கு வழங்கும்படி தனது மகன் ஒருவர் வெளிநாட்டிலிருந்து பணம் அனுபபி யதாகவும் அதனால் தான் இவ்வுதவியினை மேற்கொண்டதாகவும் கூறியுள்ளார்.

## பூரணஇராணுவ மரியாதைகளுடன் தாண்டியடியில் பாவா, யோகா ஆகியோரின் வித்துடல்கள் விதைப்பு

தமிழ்த்தேசவிரோதிகளின் தாக்குல்களில் வீரச்சாவடைந்த வாவா, யோகா ஆகியோரின் வித்துடல்கள் நேற்றுமாலை தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் புனிதவிதைகுழியில் விதைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் மட்டு -அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஷ்,தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி அரசியல்துறைதுணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழீழ நிதர்சனப்பொறுப்பாளர் சேரலாதன், மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் தளபதிகளான ராம், ரமணன், ஜனார்த்தனன், ஜெயானந்தன், நிர்வாகப்பொறுப்பாளர் தயாமோகன், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மட்டு-அம்பாறை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி, மற்றும் போராளிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இராணுவ மரியாதை செலுத்தினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி,லெமனேட் டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும்:- பிள்ளையார் பொத்தகசாலை,கண்டிவீதி, கிளிநொச்சி. T/P.021 2285750 (சி-10064)

உடன்தேவை

ஏ-9 வீதியில் (டிப்போச் சந்திக்கும், கந்தசாமி கோவிலுக்கும்) இடையில் கிணற்றுடன் கூடியதும், கட்டடங்களுடனும் அமையக்கூடிய வாடகைக்கு கடை இருத்தல் விரும்பப்படுகின்றது. உடன் தொடர்பு கொள்ளவும். இ.சுதா, 65,புகையிரதவீதி, கிளிநொச்சி. (4983)

# தமிழீழ மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் அளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது

### -தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் கரிகாலன்



தமிழீழத் தாயகத்தில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு நெல் உற்பத்தி இடம்பெறுவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மன்னார் கறுக்காய்க்குளத்தில் நடைபெற்ற விவசாய அமைப்புக்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழர் தாயகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லில் 60 விழுக்காடு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப்பயன்படுத்தப்படுவதாகவும், ஏனைய 40 விழுக்காடான நெல் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்த அவர், ஏனைய தானியப் பயிற்செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்த அனைவரும் பாடுபடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். முன்னதாக நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் முல்லை வீரன் ஏற்றினார். நிகழ்வில் விவசாய அமைப்பின் கொடிகள் ஏற்றப்பட்டன. கருத்துரைகளை தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், அரச அதிபர் வெ.விஸ்வலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நிகழ்த்தினார். நிகழ்வில் முன்னதாக துறைசார் போட்டிகள் நடைபெற்றுள்ளன. (மி)

# இந்தியாவிலிருந்து மேலும் இருவர் மன்னாரூடாக தாயகம் திரும்பினர்


இந்திய அகதிமுகாம் கோவை மாவட்டம் பொள்ளாச்சி, அகதி முகாமிலிருந்து மேலும் இருவர்தாயகம் திரும்பியுள்ளனர். இவர்கள் சிறிய படகுமூலம் தலைமன்னார் வந்தடைந்த பின்னர் மன்னார் பொலிசாரிடம் சரணடைந்தனர். இவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தியபின் அவர்களது சொந்த இடத்திற்கு அனுப்பிவைத்தனர்.

இவர்களை விசாரணை செய்த போது இவர்கள் வந்த படகில் 15பேர் வந்ததாகவும் 13பேர்பதிவு செய்யாமல் சுயமாகவே தமது சொந்த இடத்திற்குச் சென்றதாகவும் தெரிவித்துள்ளனர். (மி)

# கிளி. மத்திய கல்லூரியில் சாரணிய பாசறை நிகழ்வு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மத்தியகல்லூரி சாரணிய மாணவர்களின் இரண்டாம் பயிற்சிப் பாசறை அமைக்கும் நிகழ்வுகள் கடந்த வெள்ளியன்று



ஆரம்பமாகி சிறப்பான முறையில் நடைபெற்று நேற்றிரவு பாசறைத் தீ அமைக்கும் நிகழ்வுடன் இன்று அதிகாலை நிறைவுபெற்றன.

மாவட்ட ஆணையாளர் புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் வனப்பாசறை நிகழ்வில் மத்திய கல்லூரியில் இருந்து 48 மாணவர்களும், கிளி;/ இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 15 மாணவர்களும் பங்குபற்றினார்கள். நேற்று இரவு நடைபெற்ற பாசறைத்தீ அமைக்கும் நிகழ்வில் சாரணிய மாணவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்றன. என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## திருநாள் ஆரம்பம்

முல்லைத்தீவு சிலாவத்தை புனித அன்னம்மாள் திருநாள் கடந்த 19ஆம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. இது எதிர்வரும் 29.08.2004 அன்று நிறைவடையும்:

நேற்று முதல் நன்மை எடுத்தல் நிகழ்வு இடம் பெற்றது. இதனை முல்லைப்பங்குத்தந்தை ஜேம்ஸ்பத்திநாதர் அடிகளார் நிகழ்த்தினார். (20)

## விசேட மருத்துவ சிகிச்சை

பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் நாளை செவ்வாய் காலை விசேட கருவிகள் மூலம் இருதய சிகிச்சை மற்றும் பொது வைத்தியங்கள் அனைத்தும் நடைபெற இருப்பதோடு அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

## நீர்ப் திட்டத்தின் கீழ் பளையில் நீர்த்தாங்கி அமைப்பு

நீர்ப்வேலைத்திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளிபிரதேச சபையினரால் பளை நகர் பகுதி மக்களுக்கு குடிநீர்த் தேவையை பூர்த்திசெய்வதற்காக பளை பொதுச்சந்தையில் 25லட்சம் ரூபாய் செலவில் ஒருபுதிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுவருகின்றது.

இதனால் பளைநகர் பகுதி மக்கள்பெரும்பயன் அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (11)

# வாரம் முழுவதும் சந்தை இயங்க நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

வடமராட்சிக்கிழக்கில் இயங்கி வரும் ஒரேஒரு சந்தையான மருதங்கேணி சந்தை தற்போது வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் இயங்குகின்றது. செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மிகுதி நாட்களான திங்கள், புதன்,வியாழன், சனி ஆகிய நாட்களிலும் சந்தை இயங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கையினை எடுத்து, இச்சந்தையை இயங்கவைக்க வேண்டும்என இப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட துறையினரையும், அதிகாரிகளையும் வேண்டி நிற்கின்றனர். அத்துடன் இந்த வருடம் முற்பகுதியில் சந்தைக்கு கட்டடம் கட்டவென இடங்கள் துப்புரவு செய்யப்பட்டன ஆனால் இன்னும் சந்தைக்கு கட்டடம் கட்டும் நடவடிக்கையையும் ஆரம்பிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

# இயக்கச்சி வலயத்துக்கான தேசிய எழுச்சிப்பேரவை தெரிவு

இயக்கச்சி வலயத்தின் வலய தேசிய எழுச்சிப்பேரவை தெரிவு இயக்கச்சி பாடசாலை மண்டபத்தில் பளைக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தியாகராசா தலைமையில் நடைபெற்றது தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துரைகளை இயக்கச்சி வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.ரூபன் நிகழ்த்தினார். இத் தெரிவில் செயலாளராக தர்மராசா அவர்கள் தெரிவாகியதோடு எட்டு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் இத் தெரிவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### -சிறப்புற நடைபெற்ற

# தாய்மடியில் தாலாட்டு இசைப்பேழை அறிமுகவிழா

தமிழீழ விடியல் இசைக் குழுவின் தாய்மடியில் தாலாட்டு இசைத்தட்டு ஒலிப்பேழை அறிமுகவிழாவும் இசைநிகழ்வும் நேற்று மாலை 5.30 மணிக்கு புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் மிகவும் சிறப்பான முறையில் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச்சுடரை தமிழீழ தேசியஎழுச்சிப் பேரவையின் துணைப்பொறுப்பாளர் செங்கதிர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட பொருண்மிய பொறுப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார் வரவேற்புரையை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி நிகழ்த்த, அறிமுக உரையை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் அவர்களின் செயலாளர் வேதவனம் ஆற்றினார் இதனைத் தொடர்ந்து தாய்மடியில் தாலாட்டு இசைத்தட்டு ஒலிப்பேழையின் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. இதனை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் வெளியிட்டு வைக்க, ஆனந்தபுரம் கிருஷ்ணர் ஆலய பிரதமகுரு பிரம்மசிறி இராமசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து மதிப்பீட்டுரையைவிடுதலைப்புலிகளின் முக்கியஉறுப்பினர் பாலகுமாரன் ஆற்றினார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது இதனைத் தொடர்ந்து இசைநிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (08)

# பழுதடைந்த வீதியினால் போக்குவரத்துக்குச் சிரமம்

(முள்ளியவளை)

தண்ணீரூற்று -நெடுங்கேணி பிரதான வீதியில் தண்ணீரூற்று-நெடுங்கேணி சந்தியில் இருந்து முள்ளியவளை 6ஆம் கட்டை வரையான வீதி படுமோசமான நிலையில் குன்றும் குழியுமாக வுள்ளதால் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வீதியூடாக முள்ளியவளைப் பகுதியில் இருந்தும் நெடுங்கேணி, தண்டுவான் பகுதிகளில் இருந்தும் நாளாந்த செயற்பாட்டுக்குச் செல்லும் துவிச்சக்கரவண்டிகள் ,மோட்டார் வண்டிகள் குன்றும் குழியுமான இடங்களில் விபத்துக்குள்ளாகி ஓட்டுநர்கள் காயப்பட்டு வருவதுடன், வாகனங்களும் ஆடி அசைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை மேற்படி வீதியில் தண்டுவான் வரையான வீதியோரங்கள் காடுகளால் மூடப்பட்டநிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## சிறுவர் தொடர்பான பயிற்சி நெறி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளம் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் சிறுவர் தொடர்பான 1ஆம்நாள் பயிற்சி நெறிகடந்த 18ஆம் திகதி காலை 9மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலர் ச.அ. ஜெறோம் தலைமையில் இடம் பெற்றது.

கருத்துரைகளை சிறுவர் பராமரிப்பு நல்நடத்தை உத்தியோகத்தர் வி.சிவபாலசுப்பிரமணியம், சமூக வேவை உத்தியோகத்தர் குணசிங்கம், சிவபுரம் பாடசாலை அதிபர்ஆகியோர் வழங்கினர். (24)

வன்னி நெட் கபே
Vanni Net Cafe
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது
- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பாராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்





கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)

# புஷ்ஷை எதிர்க்கும் ஜோன்கெரிக்கு ஆதரவாக வியட்நாமில் நடக்கிறது "டி-ஷர்ட்" பிரசாரம்

(ஹனோய்)

**அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஜோன்கெரி வியட்நாம் போரில் பதக்கம் பெற்றவரா? இல்லையா? என்ற சர்ச்சையில் புதுத் திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. வியட்நாமில் அவரது ஆதரவாளர்கள் "டி-ஷர்ட்" பிரசாரத்தைத் தொடக்கி இருக்கின்றனர்.**



அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பரில் நடக்கிறது. குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் புஷ் போட்டியிடுகிறார். சனநாயகக் கட்சி சார்பில் ஜோன் கெரி போட்டியிடுகிறார்.

1975இல் முடிந்த வியட்நாம் போரில் ஜோன்கெரி கேணலாகப் பணியாற்றினார். வியட்நாமின் தெற்கு மெகாங் பகுதியில் நடந்த போரில் காயமடைந்தார். வெண்கலம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை சிறந்த சேவைக்காகப் பெற்றார்.

அதிபர் புஷ் அமெரிக்காவில் டெக்சாஸ் விமானப் படையில் பணியாற்றினார். அவர் அங்கிருந்து அடிக்கடி தலைமைறைவாகி விடுவார்.அதற்கு அங்குள்ள வருகைப் பதிவேடுகளே சாட்சி என ஜோன் கெரி ஆதரவாளர்கள் பிரசாரம் மேற்கொண்டனர். இந்தப் பிரசாரம் மிகுந்த வரவேற்பைப்பெற்றது. அதிபர் புஷ் ஆதரவாளர்கள் இதனால் எரிச்சலடைந்து. ஜோன் கெரியின் போர்க்களப் பணிகளை குற்றம் சாட்டி பிரசாரம் மேற்கொண்டனர்.ஜோன்கெரிக்கு எதிரான விளம்பரங்களை முறைப்படுத்துமாறு தேர்தல் அதிகாரிகளிடம் அவரது ஆதரவாளர்கள் முறையிட்டனர். ஆனால் ஜோன்கெரி பொறுமையிழந்து செயற்படுகிறார் என அதிபர் புஷ் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர். தற்போது இந்த விவகாரத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. அமெரிக்காவைச் சேர்ந்த லாரிஹோல்ஜ்மேன் என்பவர் வியட்நாமில் தொண்டு நிறுவனம் நடத்துகிறார். கெரிக்கு ஆதரவாக "டி-ஷர்ட்"பிரசாரத்தை அவர் தொடக்கினார். "ஜோன் கெரிக்கே வெளிநாட்டில் வசிக்கும் அமெரிக்கர் ஆதரவு" என அச்சிடப்பட்ட வாசகங்கள் அதன் முன் பக்கம் உள்ளன. அத்துடன் புஷ்ஷின் படமும் அதன் மீது பெருக்கல் குறியும் இருக்கிறது. இதன் விலை ரூபாய் 250. வியட்நாம் போரில் பணியாற்றிய சக்சேரி இதன் விற்பனையைத் தொடக்கினார். அவர் கூறுகையில் ஜப்பானியர்களும் இந்த 'டி-ஷர்ட்'களை வாங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர் என்றார்.



ஈராக் நஜாப் நகரில் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப்படையினரும், ஈராக் தேசியப்படையினரும்.

# அமெரிக்க சிறையில் வாடும் 200பேரை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம்

(நியூயோர்க்)

அமெரிக்க சிறையில் வாடும் இந்தியர்கள் உட்பட 200பேர் தம்மை விடுவிக்குமாறு கோரி உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் 'வாக்கென் கட்' என்ற சிறைச்சாலை உள்ளது. இங்கு இந்தியர்கள் உட்பட வெளிநாடுகளைச் சேர்ந்த 200 பேர் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்கள். நியூயோர்க் நகரில் 2001ஆம் ஆண்டு 110 மாடி (இரட்டைக்கட்டடம்) தகர்க்கப்பட்ட பிறகு இவர்கள் கைது செய்யப்பட்டு இந்த சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தாங்கள் ஏன் கைது செய்யப்பட்டோம்? என்ன வழக்கு? என்பது கூட அவர்களுக்குத் தெரியவில்லை. யாருடனும் தொடர்பு வைக்கவும், அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

மேலும், அந்த சிறைச்சாலையில் கைதிகளுக்குத் தரம் குறைந்த உணவு வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகின்றது. அந்த சிறைச்சாலையை தனியார் நிறுவனம் ஒன்று நடத்தி வருகிறது. சுகாதார வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை.

எனவே விசாரணையை விரைவாக நடத்தி தங்களை விடுவிக்க வேண்டும். அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டும் என்றுகோரி கைதிகள் கடந்த திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதம் தொடங்கியிருக்கிறார்கள். சுமார் 175 கைதிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

# எதிர்க்கட்சிக் கூட்டத்தில் தொடர்குண்டு வெடிப்பு பங்களாதேசில் 14பேர் பலி: 300 பேர் காயம்

(டாக்கா)

பங்களாதேசில் எதிர்க்கட்சிப் பொதுக்கூட்டத்தில் நேற்று இடம்பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்பில் 14பேர் உயிரிழந்துள்ளனர். 300பேர் காயமடைந்தனர்.



இதன்போது பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டமுன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மயிரிழையில் உயிர்தப்பினார்.

பங்களாதேஷின் வட கிழக்குப் பகுதியில் இருக்கும் புனித நகரான சில்ஷெட்டில் சமீபத்தில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றன. இதைக்கண்டித்து முன்னாள் பிரதமரான ஷேக் ஹசீனா தலைமையிலான முக்கிய எதிர்க்கட்சியான அவாமி லீக் சார்பில் நேற்று முன் தினம் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைநகர் டாக்காவில் எதிர்க்கட்சித் தலைமை அலுவலகம் முன்பாக இந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான ஷேக் ஹசீனா பேசி முடிக்கும் போது பொதுக் கூட்டம் நடந்த இடத்திலும், சில் ஷெட்டில் பல்வேறு இடங்களிலும் தொடர்ச்சியாகக் குண்டுகள் வெடித்தன.

இதில் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் உட்பட 300இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். அவர்களில் 14பேர் உயிரிழந்தனர். கூட்டத்தில் கலந்துகொண்ட ஹசீனாவின் கதிபற்றி முதலில் தெளிவாகத் தெரியாமல் இருந்த போதும், பின்னர் குண்டுவெடிப்பில் அவர் உயிர் தப்பியதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொதுக்கூட்டம் நடந்த இடத்தில் ஆங்காங்கே இரத்தம் சிந்திக் கிடந்தது. செருப்புகள் சிதறிக்கிடந்தன. குண்டுவெடிப்பால் ஆத்திரம் அடைந்த தொண்டர்கள் பல வாகனங்களைத் தீவைத்துக் கொளுத்தினார்கள். ஹசீனாவைக் கொலை செய்வதற்காகவே இந்தக் குண்டு வெடிப்பு நடந்துள்ளதாகத் தேசிய அவாமி லீக் பொதுச்செயலாளர் அப்துல் ஜலீல் குற்றம் சாட்டியிருக்கிறார்.



பாக்தாத்துக்கு 70 கி.மீற்றர் தொலைவில் காலிஸில் நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பீல் சேதமடைந்த இடத்தை அவதானிக்கும் ஈராக் தேசியப்படையினர்.

# நஜாப்பில் பதட்டமான சூழ்நிலையில் மசூதியை ஒப்படைக்க அல்-சதார் சம்மதம்

(நஜாப்)

புனித நகர் நஜாப்பில் உள்ள இமாம்அலி மசூதியை ஷியா மதத் தலைவர் அயதுல்லா அலி அல் சிஸ்டானியிடம் ஒப்படைக்கத் தயார் என்று ஷியா போராட்டத் தலைவர் முக்ததா அல் சதார் கூறியுள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகளை எதிர்த்து ஷியா பிரிவு முஸ்லிம்கள் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். புனித நகர் நஜாப்பில் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் மோதல் நடந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன் ஷியா போராட்டக்காரர்கள் தங்கியிருந்த கட்டடங்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தின. இதில் பலர் பலியாயினர்.

இந்நிலையில் நஜாப்பில் உள்ள புனித இமாம் அலி மசூதியை ஷியா பிரிவு போராட்டத் தலைவர் முக்ததா-அல்.சதார் கெரில்லாப்படையினர் கைப்பற்றினர்.அவர்களை விரட்டியடித்து மசூதி மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அமெரிக்கப் படையினர் கூறினர். இதை திட்ட வட்டமாக முக்ததா-அல்-சதார் நேற்று முன்தினம் மறுத்தார். அவரது கூட்டாளிகளும் அமெரிக்கா ஜோக் அடிப்பதாகக் கூறி ஆவேசமாகச் சிரித்தனர். மசூதியைச் சுற்றியுள்ள தெருக்கள் முழுவதும் அல்-சதார் கெரில்லாப் படைகளின் கட்டுப்பாட்டில் தான் உள்ளன. அந்தப் பகுதி முழுவதும் இயந்திரத் துப்பாக்கிகளுடன் கெரில்லாப் படையினர் ரோந்து சுற்றிவருகின்றனர். பதட்டமான நிலையில் அல்-சதார் நேற்று முன்தினம் கூறியதாவது "இமாம் அலி மசூதியை மதத் தலைவர் சிஸ்டானியிடம் ஒப்படைக்கத் தயார். அவர்களிடம் தான் மசூதிக் கட்டுபாடுஇருக்கவேண்டும்.மசூதியை ஏற்க சிஸ்டானி ஒப்புக் கொள்ள வேண்டியது அவரதுகடமை. மசூதியை ஒப்படைப்பதற்கான காலக்கெடு எதுவும் கூற முடியாது. இந்தப்பிரச்சினைக்கு ஈராக் இடைக்கால அரசுசுமுகமான தீர்வைக் காண வேண்டும். பிரதமர் இயாத் அல்லாவி அரஇதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இராணுவ ரீதியிலான நடவடிக்கை நிச்சயம் தீர்வை ஏற்படுத்தாது. அமெரிக்கர்கள் பலனடையக் கூடிய எந்த முடிவும் பயன் தராது" இவ்வாறு அல் சதார்கூறினார். இதற்கிடையில் ஈராக்சமாரா நகர்சாலையோரத்தில் பயங்கர வெடிகுண்டு வெடித்ததில் அமெரிக்கப் படைவீரர்கள் இருவர் நேற்று உடல் சிதறிப் பலியாயினர். தலைநகர் பாக்தாத்தில் இருந்து 100கி.மீ தொலைவில் உள்ள சமாரா நகரில் நேற்று அமெரிக்க வீரர்கள் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சாலையோரத்தில் வெடி குண்டு வெடித்ததில் இருவர் பலியாயினர் என்று அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

## இந்தியாவுடன் பேச்சு தொடரும் பாக்.புதிய பிரதமர் அஜீஸ்

இந்தியாவுடன் அமைதிப் பேச்சுத் தொடரும் என்று பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப் பேற்கஇருக்கும் சவுகத்அஜீஸ் கூறியுள்ளார்.முன்னாள் பிரதமரின் ராஜினாமாவையடுத்து புதிய பிரதமராக சவுகத் அஜீஸ் என்பவரை நியமிக்கபாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் முடிவு செய்துள்ளார். இதனையடுத்து பாகிஸ்தான் எம்.பி தொகுதி இடைத்தேர்தலில் சவுகத்அஜீஸ்போட்டியிட்டுள்ளார். இந்த இடைத்தேர்தலில் அவர் வெற்றிபெற்று அனேகமாக அடுத்த வாரம் புதியபிரதமராகப் பொறுப் பேற்க இருக்கிறார்.



ரோக்கியோவின் பிரதான சந்தை வாய்ப்பு மாவட்டமான ஜின்சாவில் மிகப்பெரிய பனிமனிதனைச் சுற்றி விளையாடும் ஜப்பானியச் சிறுவர்கள்.

# அறிமுகமில்லாதவர்களின் வாகனங்களை தவிர்த்து மாணவர்கள் விழிப்புடன் நடந்து கொள்க!

-ஆபத்துக்களைத் தவிர்க்க அறிவுரை

(அலுவலக செய்தியாளர்)

**பாடசாலை மாணவர்கள் உட்பட இளம் சமூகத்தினர் வீதியால் செல்லும் பேருந்துகள் தவிர்ந்த ஏனைய வாகனங்களில் இடை மறித்து ஏறிப்பயணிப்பது பல ஆபத்தான விளைவுகள் உட்பட பெரும் விபத்துக்களிலும் சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வருவதாக கல்விச் சமூகத்தினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.**

தற்காலத்தில் வீதிகளால் பயணிக்கும் வாகனங்களில் பெருமளவானவை அறிமுகமில்லாதவர்கள் செலுத்தும் வாகனங்களேயாகும். இவற்றைப் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் சமூகத்தினர் இடைமறித்து ஏறி பயணிக்கின்றனர். அத்தோடு அறிமுகமில்லாதவர்கள் பயணிக்கும் உந்துருளிகளையும் இடைமறித்து ஏறிப்பயணிக்கின்றனர். ஆனால் வாகன சாரதிகள், உந்துருளி செலுத்துவோர் சிலர் பொறுப்பற்ற தன்மையில் செயற்படுவதால் அடிக்கடி வீதிவித்துகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே இவ்வாறு இடைமறித்து ஏறுவதால் வீதி விபத்தின் போது இவர்களும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். அத்தோடு சில சமூக சீர்கேட்டு செயற்பாட்டிற்கு துணைபோகும் நபர்கள் செலுத்தி வரும் வாகனங்களில் ஏறிப்பயணிப்பதால் பல சமூக சீர்கேடுகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே இவ்வாறான சம்பவங்களிலிருந்து இளைய் தலைமுறையினரைப் பாதுகாக்கும் பொருட்டு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமெனவும் பெற்றார்களும் இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனவும் கேட்கப்படுவதோடு, மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினர் அறிமுகமில்லாதவர்கள் செலுத்தி வரும் வாகனங்களில் ஏறிப் பயணிப்பதை நிறுத்திக் கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றனர். (ச,தீ)


## 22 அகதிகள் கைது

இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்கு வருவதற்கு ஆயத்தமாக இருந்த 22 பேரை கடந்த வெள்ளியன்று இராமேஸ்வரக் கடலோரக் காவல்படையினர் கைது செய்து மண்டபம் முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தபின் விடுவித்துள்ளனர்.(மி)

## கனகராயன்குளம் ம.வியில் 3 மாடிக் கட்டடம் திறக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் புதிதாக



அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் எதிர்வரும் 01.09.2004 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேசினால் திறந்து வைக்கப்படவுள்ளது. வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் அடங்கும் இப்பாடசாலை ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாக அழிக்கப்பட்டது. பின்னர் அங்கு இயங்கிவரும் பாடசாலை கட்டட வசதிகள் அற்று இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திறப்புவிழா வைபவத்தை பாடசாலை அதிபர் மா.ஆனந்தகுமார் தலைமை தாங்க, முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்துகொள்வார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், மாவட்ட நிகொட் திட்டப் பணிப்பாளர் ம.கிருபாசுதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். இந்த வைபவத்தில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் அன்புடன் அழைக்கின்றனர். (சோ,கு)

## சமகால கருத்தமர்வு

கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரும், அரசியல்துறையினரும் இணைந்து மன்னார் நகர மக்களுக்கு சமகால நிலைமைகள் பற்றிய கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர். அண்மையில் வெளியிடப்பட்ட தமிழீழ வீடியோ படங்கள், விடுதலை கானங்கள் அடங்கிய ஒளிநாடாக்கள் போன்றவை காண்பிக்கப்படுவதோடு மக்களுக்கு சமகால நிகழ்வுகள் பற்றிய கருத்தரங்குகளையும் வழங்கி வருகின்றனர். இதற்கமைய கடந்த வெள்ளியன்று சாந்திபுரம், தாழ்வுப்பாடு பகுதிகளிலும் இடம்பெற்றன. (மி)

## வீதி ஒழுங்கு குறித்து மக்களுக்கு காவல் துறையினரால் விளக்கம்

(புதுக்குடியிருப்பு)

தமிழீழ காவல்துறையினர் கடந்த 18 ஆம் திகதியிலிருந்து புதுக்குடியிருப்பில் மக்களுக்கு வீதி ஒழுங்கு பற்றிய விரிவான விளக்கத்தை வழங்கி வருகின்றனர்.

அண்மைக்காலமாக வீதிவிபத்துக்கள் அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து இதனைத் தடுப்பதற்கு காவல் துறையினர் பல விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதில் ஒரு நடவடிக்கையாக இதனை மேற்கொள்கின்றனர்.

இதற்கமைய போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பல உந்துருளி ஓட்டுநர்களுக்கு காவல் துறையினரால் விரிவாக வீதி ஒழுங்குகள் பற்றி எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன் இச்செயற்பாடானது தொடர்ந்து இடம்பெறும் என காவல் பணிமனைப் பொறுப்பாளர் தெரிவித்தார். (08)

## புதிய நிர்வாகத் தெரிவு

(வட்டக்கச்சி)


வட்டக்கச்சி சிவிச்சென்ரர் வலய தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத் தெரிவு புதன் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வட்டக்கச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சோதிநிலவன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது. மேற்படி கூட்டத்தில் நிர்வாகங்களின் செயற்பாடு, அணுகுமுறை போன்றனவும் இடம்பெற்றது. அத்தோடு புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. செயலாளராக ரூபசிங்கம், உபசெயலாளர்-க.பரராஜசிங்கம், பொருளாளர் ஆழ்வாய்ப்பிள்ளை மற்றும் உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது. இ.தர்மராசா-இளையோர் செயற்பாட்டுக்குழு இ.தாரணி மற்றும் இ.புஸ்பரமணி மகளிர்-அமைப்பு, மு.இராமையா மற்றும் செ.சிவபாலன் பொது அமைப்பு, மு.தர்மராசா-விளையாட்டுக்குழு போன்ற உறுபபினர்கள் தெரிவும் அதனைத் தொடர்ந்து கருத்துரைகளைக் கிளிநொச்சி மாவட்டதேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் திருமாறன், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் பொன்னுத்துரை ஆகியோர் வழங்கினார்கள் (12)

## நெடுங்கேணி அரசினர் வைத்தியசாலை நிகொட் திட்டத்தில் புதிதாக நிர்மாணம்

–தற்காலிக வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லை

(அலுவலக செய்தியாளர்)

'நிகொட்' திட்டத்தின் கீழ் நெடுங்கேணியில் புதிதாக அரசினர்



வைத்தியசாலை பாரிய அளவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா வடக்கில் நெடுங்கேணிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மருத்துவ வசதியினை வழங்கும் ஒரே ஒரு வைத்தியசாலை நெடுங்கேணி சுற்றயல்கூறு வைத்தியசாலையாகும். இது தற்போது சிறிய கட்டடத் தொகுதிக்குள் வசதிகள் ஏதும் அற்ற நிலையில் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடன் புதிய ஓர் வைத்தியசாலையினைச் சகல வசதிகளும் அடங்கியதாக அதாவது ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, குழந்தைகள் விடுதி வெளிநோயாளர் பிரிவு போன்றவற்றுடன் வைத்தியர்கள் தங்கும் விடுதி போன்ற தனித் தனியான வசதி கொண்ட கட்டடங்களாக பாரிய திட்டத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வைத்தியசாலையானது நெடுங்கேணியிலிருந்து புளியங்குளம் செல்லும் பிரதான வீதியில் ஏற்கனவே விளையாட்டு மைதானமாக இருந்த காணியில் அமைக்கப்பட்டு வருகிறது. விளையாட்டு மைதானம் பிறிதோர் இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தற்போது இயங்கிவரும் நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலைக்கு நிரந்தரமான ஒரு வைத்தியர் இல்லை என்று வைத்தியசாலை ஊழியர்களும், மக்களும் கவலை தெரிவித்துள்ளனர். தற்போது கடமையாற்றுபவர் வவுனியாவிற்குள் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## பளைப்பகுதியில் வீடு முற்றாக எரிந்து நாசம்

(வடமராட்சி கிழக்கு)

பளை வண்ணாங்கேணி வடக்குப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி மதியம் 1.30 மணிக்கு தம்பிராசா ஆனந்ததேவன் என்பவருடைய வீடு தீயினால் எரிந்து முற் றாக அழிந்துள்ளது. அன்றுமதியம் வீட்டில் எல்லோரும் நித்திரையில் இருந்த போது வீடு எரிவதனை உணர்ந்து எழுந்து அயலவர் களின் உதவியுடன் தீயை அணைப்பதற்கு எடுத்த முயற்சியும் பயன்தரவில்லை. வீட்டில் பல பெறுமதி மிக்க பொருட்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது. உணவு முத்திரை, குடும்பஅட்டை, திருமணச்சான்றிதழ், பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்கள், உடுபுடைவைகள், வீட்டுத் தளபாடங்கள் உட்பட அனைத்தும் எரிந்துள்ளது. (11)

## வவுனியாவில் வரட்சியால் பாதிப்புற்றோருக்கு உதவியளிக்க அரச அதிபர் தலைமையில் ஆராய்வு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியை அடுத்து இதற்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் மாலை வவுனியா அரச செயலகத்தில் வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் உதவும் வகையில் இந்தக்கூட்டம் நடைபெற்றதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். இதற்காக 5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் விவசாய உட்கட்டமைப்பு, கிராமிய விவசாயம், நீர்விநியோகம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் இந்த நிவாரணமானது உலக வங்கியின் நிவாரணம் பெறுபவர்களும், அரச நிவாரணம் பெறுபவர்களும் பெறமுடியாது என்றும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வில் மேலதிக அரசஅதிபர் எஸ்.ரகுநாதபிள்ளை, பிரதேச செயலாளர்கள், நியாப்திட்ட அதிகாரிகள் புனர்வாழ்வுக் கிளையின் கணக்காளர், அரச செயலகத்தின் நிறுவன உத்தியோகத்தரும் கலந்து கொண்டனர். (21)

## அனுமதியின்றி இயங்கும் திருத்தகங்கள் மூடப்படும்

வவுனியாவில் அனுமதியில்லாமல் இயங்கும் அனைத்து வாகனம் திருத்தும் கராச்சுகள் நிறுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அரச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அனுமதியில்லாத கராச்சுகள் வாகனங்களை வீதியில் நிறுத்தித் திருத்துவதன் காரணமாக வீதியில் போக்குவரத்துச் செய்யும் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஷின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அவர் இந்தப் பணிப்பை நகரசபைக்கு விடுத்துள்ளார். இது தொடர்பாக ஆராய்ந்து அவர்கள் பொலிசாரின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கவுள்ளனர். (21)

# தமிழினம் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நிலை எமது தேசியத் தலைவரின் காலத்தில் வரும்

## தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில்



**"தமிழினம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் காலம் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் காலத்தில் நிச்சயம் 'மலரும்- தமிழினத்தின் கனவும் அதுவே" என தென்மராட்சித் தேசியப் பேரவையின் சங்கம நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர், சொலமன் சூ சிறில் தெரிவித்தார்.**

தென்மராட்சி இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் புனிதமிகு தியாகம் நிறைந்த விடுதலைப் பயணத்தை மேற்கொண்டு வாழத்துடிக்கும் தமிழினம் தனது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் எனில், அந்தப் புனித மிகு விடுதலைப் பயணத்தை வழிநடத்தும் தேசியத் தலைவர் அவர்களின் கரங்கள் பலம் பெற வேண்டும்.

இந்த உரிமைப்போரில் வித்தாய் விழுந்த மாவீரர்களுக்கு உலகத் தமிழினமே இன்று அஞ்சலி செலுத்துகின்றது. ஓயாத அலைகள் ஒன்றிலும்,இரண்டிலும்,மூன்றிலும் எம்மை அழிக்க நினைத்த எதிரிகளின் எலும்பை உடைத்த எமது வீரர்களின் கரங்களை வலிவுபடுத்திட போர்க்காலத்தில் போர் எழுச்சிக் குழு, சமாதான காலத்தில் தமிழர்களின் அரசியல் பலத்தை உலகுக்கு உணர்த்திட தேசிய எழுச்சிப் பேரவை தமிழர்களின் இரும்புக் கோட்டையென நிமிர்ந்து நிற்கிறது.

போர்க்காலங்களில், மக்களே போராளிகளாக மாறினர் போரெழுச்சிக்குழுவாகவும், எல்லைப்படை வீரர்களாகவும் மாறினர் இப்போர் வடிவங்களே தீர்க்கதரிசனம்மிக்க, எமது தேசியத் தலைவரின் எண்ணக்கருவில் உருவாகி விடுதலையின் வெற்றிக்கு வழி சமைத்தன. பளையில் முதல் முதலாகக் கூட்டப்பட்ட தேசிய எழுச்சிப் பேரமைப்பின் மாநாட்டுக்கு நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ். மண்ணில் இருந்து சேனையாகப் புறப்பட்டு சிறிலங்காப் படைகளின் கொடுமையான இராணுவ ஆக்கிரமிப்பை உடைத்து அன்று மாநாட்டு நிகழ்வில் கலந்து கொண்டதன் மூலம் இந்த மண்ணில் சிங்களப் படைகளுக்கு ஒரு உண்மை நிரூபிக்கப்பட்டது, தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் உறுதி செய்யப்படும் வரை தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகமாய் இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர். செம்மணன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் பாலச்சந்திரன், மாவீரர் கப்டன் தமிழ்ச்செல்வனின் சகோதரர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் கைலைப்பிள்ளை, தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சற்குணராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை சாவகச்சேரி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பேர்ணாட் நிகழ்த்தினார். சிறப்புரைகளை செம்மணன் மற்றும் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் அருந்தவபாலன், தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் ரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினார்கள். பொது அமைப்புக்களின் பொறுப்பாளர்கள், பேராளர்கள் எனப் பெரும் தொகையினர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அச்சுறுத்தல்

பாராளுமன்ற சட்டங்கள் சம்பந்தமாகவும்,பாதுகாப்புகள் சம்பந்தமாகவும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகரினால் அறிவுரைகள் வழங்கப்பட்ட கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சிலர் சரிவரக்கடைப்பிடிக்காமையால் பாராளுமன்ற பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென பாராளுமன்ற பாதுகாப்பு பிரிவினர்கள் தெரிவிக்கின்றனர்.

# வாழைச்சேனை காகித ஆலையை தொடர்ந்து இயக்க முடிவு

(கொழும்பு)

வாழைச்சேனை காகித ஆலையை மூடுவதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அண்மையில் கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா இந்த ஆலைக்கு விஜயம் செய்து சோதனையிட்ட பின் இத் தீர்மானம் எடுக்கப்பட்டள்ளது.

இந்த ஆலைக்கு புத்துயிர் ஊட்டுவதற்காக அரசாங்கம் ஐந்து மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது.

ஆலையின் இயந்திரங்களைத் திருத்த இந்த நிதி பயன்படுத்தப்படும் என இக்காகித ஆலையின் முகாமையாளர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# 54 மத்திய கல்லூரிகளின் அவசர புனரமைப்பிற்கு நிதி

(வடமராட்சி)

இரண்டாம்நிலை புதிய கல்வித் திட்டத்தின் கீழ் வட-கிழக்கு பகுதிகளிலுள்ள 54 மத்திய கல்லூரிகளில் அவசர புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவென 27 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஒன்றிற்கு 5இலட்சம் ரூபா என்ற அடிப்படையில், பாடசாலை அதிபர்களின் சிபார்சின் அடிப படையில் அவசர வேலைத் திட்டங்களைச் சமர்ப்பிக்க அரசு கோரியுள்ளது. (27)

# குடி போதையில் வாகனம் செலுத்திய 63 பேர் பொலிசாரால் கைது

கொழும்பு நகரில் கடந்த இரண்டு தினங்களில் குடிபோதையில் வாகனங்களை செலுத்திய குற்றச் சாட்டின் பெயரில் 63 சாரதிகளை பொலிசார் கைது செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நகரில் 25 இடங்களில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழுக்களே இவர்களைக் கைதுசெய்துள்ளன.

# மதமாற்றுத் தடைச் சட்டமூலத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்படும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

மதமாற்றத் தடை நகல் சட்ட மூலத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்ட பின்னர் அது பாராளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப் படுமென்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கட்சியின் பிரதித் தலைவர் சங்கைக்குரிய ஓமல்தே சோபிததேரர் இது பற்றித் தெரிவிக்கையில் உயர்நீதிமன்றம் தெரிவித்த சிபாரிசுகளுக்கமைய மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்தார். நகல் சட்ட மூலத்தை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசா ரணை செய்த உயர் நீதிமன்றம் அதிலுள்ள சில விதிகள் அரசியல் யாப்பிற்கு முரணானது என்று தீர்ப்பு வழங்கியது. இந்தக் கட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நகல் சட்டமூலத்தில் மாற்றங்களைச் செய்வதில் ஈடுபட்டிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# இடம் பெயர்ந்த பெண்களின் குரல் நல்லூரில் நேற்று சங்கம நிகழ்வு

இடம் பெயர்ந்த பெண்களின் குரல் ஓர் சங்கம அரங்கு நேற்றுக் காலை 11 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள பெண்கள் பண்பாட்டு மையத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் இடம் பெயர்ந்து அகதிமுகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் உள்ள பல நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு தொடர்பாக கருத்துரை வழங்கிய யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் உள்ள மக்களிடையே இன்று இரண்டுவிதமான வேறுபட்ட உணர்வலைகளைக் காணக்கூடியதாக உள்ளது அதாவது தாய் தந்தையர் மாரைப் பொறுத்த மட்டில் தமது சொந்த வீடுகளுக்குச் சென்று அங்கேயே வாழ வேண்டும் என்ற மனநிலையும், இளம் சந்ததியைப் பொறுத்த மட்டில் எங்காவது வாழலாம் என்ற மனநிலையும் காணப்படுகின்றது.

இம் மனநிலை ஏற்பட சிறிலங்கா இராணுவம் பாரிய பங்காற்றுகிறது. அகதிமுகாம்களில் உள்ள இளம் சந்ததியினரை பிழையான வழிகளுக்கு திசை திருப்பி அவர்களிடம் உள்ள உணர்வை மளுங்கடிக்கச் செய்து அதில் வெற்றியும் கண்டு வருகிறது. இப்படியான இராணுவச் செயற்பாட்டை மளுங்கடிக்கச் செய்யும் நோக்குடனேயே நாம் இப்படியான நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வருகின்றோம். அத்தோடு எமது மக்கள் தமது சொந்த இடங்களை இழந்து அகதி முகாம்களில் பல்வேறு கஷ்ரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பது. இனப்பிரச்சினையின் அங்கமாகவே காணப்படுகிறது. எதிரியானவன் தமிழ் மக்கள் நிலத்தைப் பறிக்க வேண்டும் என்று ஆரம்பகாலம் முதலேயே பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றான். அதன் ஓர் அங்கமாகவே இன்று உயர் பாதுகாப்பு வலயம் காணப்படுகிறது எனக் குறிப்பிட்டார். அத்தோடு அகதிமுகாம்களில் திட்டமிட்டு இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் கலாசார சீரழிவுகள் தொடர்பாக ஓர் விழிப்புணர்வு இதனூடாக ஏற்படும் எனக் குறிப்பிட்டார். (36)

# போதைப் பொருள் பாவனையாளர்களால் நாளாந்தம் 50 இலட்சம் ரூபாய் செலவீடு

## -போதைப்பொருள் தடுப்புப் பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் போதைப் பொருட் பாவனையாளர்கள் அதற்காக நாளாந்தம் ஐம்பது மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறார்களென போதைப்பொருள் பணியகம் தெரிவித்துள்ளது.

போதைப் பொருட் பாவனைக்கு ஓர் இலட்சத்திற்கும் அதிகமானோர் அடிமையாகியுள்ளதாகவும், சிறைக்கைதிகளில் ஐம்பது சதவீதமானோர் போதைப் பொருள் சம்பந்தமான குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வருவதாகவும் அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை போதைப் பொருள் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டவர்களில் 48 சிறைக்கைதிகளுக்கு மரணதண்டனை வழங்கப் பட்டதாகவும் அது மேலும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புஞ்சித ஜயசுந்தர குறிப்பிடும் போது போதைப் பொருள் குற்றத்திற்காக 89 சிறைக் கைதிகள் ஆயுட்காலச் சிறைத் தண்டனையை அனுபவிக்கிறார்கள் எனக் கூறிய அவர் நாட்டிற்கு தொண்ணூற்றேழு சதவீதமான போதைப்பொருள் இந்தியாவில் இருந்தே கடத்தப்படுகின்றது எனவும் சர்வதேச போதைப் பொருள் வர்த்தகத்திற்கு சிறிலங்கா ஓர் விநியோக மையமாக விளங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா.சபை 59 ஆவது அமர்வில் சந்திரிகா பங்கேற்கிறார்

ஐக்கிய நாடுகள் சபையின் 59 ஆவது அமர்வில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பங்கேற்கிறார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த அமர்வில் அன்றைய தினமே இலங்கை சனாதிபதியின் உரை இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஸ்ஸும் பங்கேற்கிறார்.

அதேநேரம் சனாதிபதி எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஆசிய சமூக பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றவுள்ளார். இந்த நிலையில் தற்சமயம் லண்டன் சென்றிருக்கும் சனாதிபதிக்காக அவரின் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஏற்றுள்ளார் (32)

# இராணுவப் புலனாய்வுப் பிரிவு சிப்பாய் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்தவரின் வீடு இனம் தெரியாத குழுவொன்றினால் சேதமாக்கப்பட்டது.

பொலநறுவையில் சென்ற செவ்வாய் இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது குறித்த படைச் சிப்பாயின் வீட்டின் மீது இனம் தெரியாத குழுவொன்று துப்பாக்கிச் சூடு நடாத்தியதாகவும், எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென்றும், சம்பவ நேரம். அச்சிப்பாய் வீட்டில் இருக்கவில்லையென்றும் தெரிவிக்கும் பொலநறுவைப் பொலிசார்.இத்தாக்குதலினால் வீட்டிற்கு 15,000 ரூபாய்கள் மதிப்பிலான தேசம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

# அரிதான மனிதப்பிறப்பில் ஆச்சரியத்திற்குரிய இரட்டையர்கள்

## இன்று சர்வதேச இரட்டையர்தினமாகும்



உலகில் வாழ்கின்ற ஜீவராசிகளில் மேன்மையான இனம் மனித இனம் "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது..." என்பதற்கு அமைய மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றான் என்றால் மிகையாகா.


இன்று உலக இரட்டையர் தினமாகும். நவீன விஞ்ஞான உலகத்திற்கே பெரும் ஆச்சரியமாக அமையும் இவ் இரட்டையர்கள் பொதுவாக இயல்பு, தோற்றம் போன்றவற்றில் ஒத்திருப்பதனால் சில வேளைகளில் ஒருவர் செய்யும் குற்றத்திற்கும் மற்றையவர் தண்டிக்கப்படுவதும் ஒருவர் செய்யும் நற்காரியத்திற்காக மற்றையவர் பாராட்டப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவர்கள் வாழும் சமூகத்தில் பலராலும் ஒருவரின் செயற்பாட்டை மற்றையவருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் இயல்பு தாமாகவே எழுகின்றது. இதனால் சமுதாயத்தவர்களினால்இவர்கள் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றனர். இவ்வாறான சமூதாயக் கண்ணோட்டங்கள் இவர்களை உற்சாகப்படுத்துமாயினும் சில வேளைகளில் உளத்தாக்கததிற்கு உட்படுத்துவதுடன் அவர்களுக்குள் தாழ்வுச் சிக்கலையும் ஏற்படுத்தும் கைங்கரியமாகவும் உள்ளது. அனேகமான இரட்டையர்களின் நடத்தை உடல் நிலை என்பவற்றை எடுத்துக் கொண்டால் ஒருவர் கலகலப்பாகவும், துடியாட்டமாகவும் இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மற்றயவர் கலகலப்பற்ற துடியாட்டம் அற்றவராகப் பெரும்பாலும் காணப்படுகின்றனர். இரட்டைக் குழந்தைகளில் பிறப்பினை ஆய்வாளர்களும், சமூதாயத்தவரும் தாய்வழியிலோ அல்லது தந்தை வழியிலோ ஒரு இரட்டையரின் பிறப்பு நிகழ்ந்திருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். அதாவது அவர்களுடைய சந்ததியில் ஏற்கனவே ஒரு இரட்டைக் குழந்தைகளின் பிறப்பு நிகழ்ந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக இரட்டையர்களாகப் பிறந்தவர்கள் இரட்டையர் களையே திருமணம் செய்ய எண்ணுகிறார்களென ஆய்வாளர்களின் மூலம் தெரியவருகிறது. இவர்களுக்காகவே இவர்களின் தாழ்வுச் சிக்கல், சமூக பார்வை என்பனவற்றை மாற்றுவதற்கு இரட்டையர் தினம் கொண்டாடப்படுகிறது. அண்மையில் அமெரிக்காவில் கொண்டாடப்பட்ட இரட்டையர்தின விழாவில் பல்வேறு விதமான இரட்டையர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



இதன் ஒருபடி மேலாக துரதிஷ்ட வசமாக ஒட்டிப்பிறக்கும் இரட்டையர்களின் பிறப்பு நவீன யுகத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் அம்சமாக அமைகிறது. பிறப்பில் ஒட்டிப்பிறக்கின்ற இவர்கள் தமது அன்றாட செயல்களில் ஒருவரில் ஒருவர் தங்கிவாழ வேண்டியநிலை ஏற்படுகின்றது.

இக்குழந்தைகளைப் பிரிக்கின்ற வேளை பல்வேறுபட்ட பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கின்ற அதேவேளை இவர்களை பிரிக்கின்ற வைத்தியர்களும் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. நவீன விஞ்ஞான உலகில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களை பிரிக்கும் முயற்சியில் ஈராணைச்சேர்ந்தலாலே, லேடன் சகோதரிகளை பிரிக்கும் முயற்சி தோல்வியடைந்தது சோகநிகழ்வாகும். இவர்கள் உலகிற்கே பெரும் சவாலாக திகழ்ந்தவர்கள், வாகனங்களைக் கூட இவர்களே இயக்கிப் பயணம் செய்தனர். அத்துடன் சட்டப் படிப்பை முடித்தவர்கள் இவ்வாறு பல்வேறு துறைகளில் பல சாதனைகளை29 ஆண்டு களாக ஒட்டிப்பிறந்த இரட்டையர் களாகவே நிகழ்த்தினார்கள். திடீரென இவர்கள் பிரிந்து தனித் தனியே வாழ ஆசைப்பட்டார்கள். இதற்கமைய இவர்களது சத்திர சிகிச்சை இடம்பெற்றது. உலகமே இதனை வியந்துபார்த்தவேளை அதிர்ச்சியான செய்தியையே இவ்விஞ்ஞான உலகினால் வழங்க முடிந்தது. இவர்கள் இறந்தாலும். எத்தனையோ ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் இன்று பல்வேறு சாதனைகளைச் செய்கிறார்கள்.



அதே வேளை பாகிஸ்தானைச் சேர்ந்த அகமத், முகமட் ஆகியோரது பிரிப்பு வெற்றியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது. ஒட்டிப் பிறந்த இரட்டையர்களைச் சுலபமாகப் பிரித்துவிடலாம் என்றோ பிரிக்க இயலாதென்றோ, நாம் விடை காண இயலாது.

அதிலும் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். அதாவது ஒருவர் எந்தச் செயலைச் செய்தாலும் மற்றையவரும் அதில் நிச்சயம் பங்குகொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வளர்ச்சியடைந்து வரும் இவ்விஞ்ஞானயுகம் ஒட்டிப்பிறக்கும் குழந்தைகளின் பிரிப்பு முயற்சிக்கு விடைகாண்பதற்குத் துடித்துக் கொண்டிருககிறது இதில் வெற்றிகாண வேண்டுமென்பதே அனைவரதும் ஆவல் .

த.ரேணுகா

---

# திலீபன் மருத்துவ சேவையினரால் ஜூலையில் 20,157 பேருக்கு சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த ஜூலை மாதத்தில் 20,157 பேருக்குச் சிகிச்சை வழங்கப் பட்டது.

இதில் திலீபன் மருத்துவ நிலையங்களான ஐயங்கன் குளத்தில் 2584 பேரும், கற்சிலைமடுவில் 2206 பேரும், மாங்குளத்தில் 2110 பேரும், ஆழியவளையில் 2059 பேரும், புங்குடுதீவில் 1839 பேரும், அளம்பிலில் 1761 பேரும், புளியங்குளத்தில் 1701 பேரும், பூநகரியில் 1343 பேரும், அடம்பனில் 1308பேரும், பாட்டாளிபுரத்தில் 941 பேரும், கதிரவெளியில் 1787 பேரும், நைனாமடுவில் 526 பேருமாக மொத்தம் 20157 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவற் றுள் வைரஸ் காய்ச்சலினால் 3405 பேரும், சுவாசப் பாதைத் தொற்றி னால் 2435 பேரும், தோல் நோயி னால் 965 பேரும், சிறுநீர்வழித் தொற்றினால் 481 பேரும், பல் நோயினால் 462 பேரும், கண் நோயினால் 76 பேரும், வயிற்றோட்டத்தினால் 472 பேரும், இடுப்புவலியினால் 2094 பேரும், வலியினால் 96 பேரும், உயர்குருதிய முக்கத்தினால் 309 பேரும், தொய்வினால் 515 பேரும், காதுத் தொற்றினால் 265 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 94 பேரும், நாய்க் கடியினால் 125 பேரும், பாம்புக்கடியினால் 15 பேரும் உட்பட மொத்தமாக 18448 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் நடமாடும் மருத்துவ சேவையினரால் 2757 பேருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

# சாரணர் பாசறைத் தீ நிகழ்வு

சிலாவத்தை தமிழ் வித்தியாலய சாரண மாணவர்களின் தீ பாசறை நிகழ்வு சிலாவத்தைக் கடற்கரையில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.திருக்குமரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முல்லை மாவட்ட சாரணிய இணைப்பாளர் வே.ஜெயம் சபாபதி கலந்து கெண்டார். சகல ஒழுங்குகளையும் இப்பாடசாலை சாரணிய ஆசிரியர்கள் ச.வாசுகி, சி.வினோதா ஆகியோர்செய்திருந்தார்கள். பாசறைத்தீயினை பாடசாலை அதிபர் ஏற்றிவைக்க கலைநிகழ்வுகளை சாரணிய மாணவர்கள், ஆசிரியர்கள் நிகழ்தினார்கள். 12.00மணிக்கு நிகழ்வு நிறைவுபெற்றது சாரணிய மாணவர்கள் பெரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் கோட்ட மட்ட சங்கமம்

(முள்ளியவளை)

முள்ளியவளைக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு சிறப்புற இடம் பெற்றது. மேற்படி நிகழ்வானது நேற்று முன்தினம் தண்ணீரூற்று இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தியாக ராசா தலைமையில் முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் நாகமைந்தன் ஏற்றிவைத்ததையடுத்து அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் வைக்கப்பட்ட மாவீரர்களின் திருவுருவப்படங்களிற்கான ஈகச்சுடரினை கடற்கரும்புலி மேஜர் இலக்கியனின் தாயார் தெய்வநாயகி ஏற்றிவைக்க, மலர்மாலையினைக் கிராம சேவையாளர் கிருஸ்ணமூர்த்தி அணிவித்ததை அடுத்து நிகழ்வில் தலைமை உரையும் தொடர்ந்து. முள்ளியவளை பிரதேசத்திற்கு உட்பட்ட கிராமசேவையாளர்களின் கருத்துரைகளும் ஊரக எழுச்சிப் பேரவையின் அறிக்கையும் கருத்துப் பகிர்வுகளும் இடம் பெற்றன. விளக்க உரையை முல்லை மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் வேதவனம் நிகழ்த்தியதையடுத்து சிறப்புரையினை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் நிகழ்த்தினார். (ஆ)

# மாங்குளம் பிரதேச கமக்கார அமைப்புக்கள் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்

முல்லை.மாவட்டத்தின் மாங்குளப்பிரதேச கமக்கார அமைப்புக்களின் சங்கமநிகழ்வு மாங்குளம் மகாவித்தியாலயத் தில் மாங்குளம் கமக்கார அமைப்புத்தலைவர் சிவானந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது.

பொதுச்சுடரினை மாங்குளப் பிரதேச முதல் மாவீரர் அர்சுனனின் தாயார் ஏற்றினார். தமிழீழ தேசியகொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றினார்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்புரையினை மாங்குளம் பிரதேச கமக்கார அமைப்புச் செயலாளர் பஞ்சலிங்கம் நிகழ்த்தினார். தலைமை உரையினை மாங்குளப்பிரதேச கமக்கார அமைப்புத்தலைவர் சிவானந்தன் நிகழ்த்த சிறப்புக் கருத்துரையினை தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் வழங்கினர் மதிய உணவு இடைவேளைக்குப் பின்பு கமக்கார அமைப்புக்களின் அறிக்கைகள் அந்தந்தப்பகுதி விவசாயிகளினால் வாசிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய முன்மொழிவுகளைக் கமக்கார அமைப்பினர் எடுத்துக் கூறினார்கள். தொடராகக் கருத்துரைகளை முல்லை.மாவட்ட உதவி விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.கோகுலதாசன் , ஒட்டுசுட்டான் பிரதேச உதவிஅரச அதிபர் திருமதி என்.செல்வராசா, முல்லை.மாவட்ட கமநலஅபிவிருத்தித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், மாங்குளம பிரதேசப் பொறுப்பாளர் அணியழகன், முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் வே.பூங்குன்றன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து ஒலுமடு தச்சடம்பன் பிரதேச சிறுபோக விவசாயிகளுக்கு ஊக்குவித்து பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாங்குளப் பிரதேச கமக்கார அமைப்பினர், முத்துஐயன் கட்டு கமக்கார அமைப்பினர், கமநல அபிவிருத்தி திணைக்களப் பணியாளர்கள், விவசாய திணைக்களப் பணியாளர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர்கள், பணியாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.(20)




## 12

★சீனாவின் கிழக்குப் பகுதியான சீயியாங் மாகாணத்தில் ஏற்பட்ட சூறாவளியில் 70 பேர் உயிரிழந்ததுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.


சூறாவளியின் கோரம்

★ஈராக்கின் நஜாப் நகரில் அமெரிக்கப் படைகள் இருப்பதைக் கண்டித்தும், ஷியா முஸ்லிம் அமைப்பின் தலைவரை ஆதரித்தும் பஸ்ராவில் சத்தாரின் ஆதரவாளர்கள் 5 ஆயிரம் பேரும் ஈராக்கியப் பொலிசாரும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


அமெரிக்காவுக்கு எதிராக...

★ஈராக்கிய கொரில்லாக்களினால் பிடித்துச் செல்லப்பட்ட பிரித்தானிய பத்திரிகையாளர் ஜோமஸ் பிராண்டனே விடுதலை செய்யப்பட்டார்.

★ஈராக்கின் தெற்கேயுள்ள நசிரியா நகரில் வெளிநாட்டு நிருபரும், மொழி பெயர்ப்பாளர் ஒருவரும் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்.

★புருண்டியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள 'ருட்ஸி' இன அகதிகள் முகாம் மீது குட்டு இன கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 200 இற்கு மேற்பட்டோர் பலியாகியதுடன், 110 பேர், காயமடைந்தனர்.

★ஈராக்கிய தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்ட ஜோர்தான் தொழிலதிபர் 2 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கிய பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

★பாக்தாத்தில் ஈராக் அரசமாளிகை மற்றும் அமெரிக்கத் தூதரகம் முன்பாக ஷியா முஸ்லிம்கள் அமெரிக்கப்படையினரின் தாக்குதலுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## 13

★ஒலிம்பிக்கின் தாயகம் என அழைக்கப்படும் கிரேக்கத்தின் தலைநகர் எதென்ஸ்சில் 28 ஆவது ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாகியது.


ஆரம்ப விழாவில்

★28 ஆவது ஒலிம்பிக்கின் முதல் தங்கத்தை சீன நாட்டு வீராங்கனை "டுலி" வென்றுள்ளார்.

## 14

★ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் ஷியாபிரிவு தீவிரவாதிகளுக்கும், அமெரிக்க ஈராக் படைகளுக்குமிடையே நடந்து வரும் சண்டையை நிறுத்துவதற்காக இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.


★அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் டம்மா பிரதேச வளைகுடாவில் ஏற்பட்ட சூறாவளியில் 14 இலட்சம் பேர் வெளியேறியதுடன் பலர் உயிரிழந்துள்ளனர்.


மாநில ஆளுநருடன் பாதிப்புற்றோர்

★பாக்தாத்தின் அருகில் உள்ள சமாரா, ஹில்லா ஆகிய இரு நகரங்களில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் 93 பேர் பலியாகியதுடன் பலர் காயமடைந்தனர்.

## 15

★இந்தியாவின் 58 ஆவது சுதந்திரதினம் வாகா எல்லைப்பகுதியிலுள்ள செங்கோட்டையில் கொண்டாடப்பட்டது.


சுதந்திரதின நிகழ்வில்

★டுபாயில் இருந்து ஈரானுக்கு செல்லும் கடற்பாதையில் கப்பலொன்று தீப்பிடித்ததினால் 4 பேர் பலியாகினர்.

★வெனிசூலாவில் சனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான மக்கள் கருத்து வாக்கெடுப்பு இடம்பெற்றது இதன்போது சனாதிபதி ஹியூகோ சாவேஸ் தொடர்ந்தும் ஆட்சியிலிருப்பதற்கு வெற்றி பெற்றுள்ளார்.

★இந்தியாவில் சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது அசாம் மாநிலத்திலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 15 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்ததுடன் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

★ ஜப்பானின் காலணித்துவத்திலிருந்து தென்கொரியா சுதந்திரம் பெற்று 59 ஆவது ஆண்டு சுதந்திர தினத்தினை கொண்டாடினார்கள். இதன்போது அமெரிக்க துருப்புக்கள் வெளியேற வேண்டுமெனக் கோரி தலைநகரிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக 10 ஆயிரம் தென்கொரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ ஈராக்கில் இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு இடம் பெற்றது.

★ ஸ்பெயின் நாட்டிற்குள் சட்ட விரோதமாக ஊடுருவ முயன்ற 300 ஆபிரிக்கர்களைப் பொலிசார் கைது செய்தனர்.

## 16

★ மலேசியாவிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடித உறையில் சந்தேகத்திற்கிடமான துகள்கள்.

★ பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் கியூசொனநகரில் 1986 ஆம் ஆண்டு 50



பத்திரிகையாளர் ஆர்ப்பாட்டம்

பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக உடனடித் தீர்வு காணுமாறு கோரி தேசிய பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் சக பத்திரிகையாளர்கள் கறுப்புடையணிந்து ஆர்ப்பாட்டம்.

★போர்னியோ தீவிலுள்ள சரவாக் என்னுமிடத்தை நோக்கி 10 இராணுவ வீரர்களுடன் புறப்பட்ட மலேசிய உலங்குவானூர்தி காணாமற் போனது.

★ சிறுவர் துஷ்பிரயோகத்தில் தொடர்புபட்டதாகக் கூறப்படும் அமெரிக்கப் பொப்பிசை பாடகர் மைக்கல் ஜாக்ஸன் நீதிமன்றில் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்.

## 17

★ பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவரும் லஷ்கர் இ.தொய்யா என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவருமான விக்கி என்கின்ற அபீத்தை டில்லியில் வைத்து பொலிசார் சுட்டுக் கொன்றனர்.

★ நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் அச்சுறுத்தலால் தலைநகர் காத்மண்டுவில் பிரபலமான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன

★ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 4 பேர்


கார்க்குண்டு வெடிப்பு

பலியாகியதுடன், 24 பேர் காயமடைந்தனர்.

★குவைத் நாட்டில் இரு இலங்கையர்களுக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு குற்றச்செயல் ஒன்றில் ஈடுபட்டதன் விளைவினாலேயே இவர்களுக்கு இத்தண்டனை.

★நஜாப் சென்ற ஈராக்கிய சமாதானத் தூதுக்குழுவை சந்திக்க ஷியா கிளர்ச்சித் தலைவர் மதகுரு மொக்ராடா அல்-சாதர் மறுப்பு.


நஜாப்பில் அமெரிக்கப் படையினர்

## 18

★ ஈராக்கின் உளவுத்துறை அதிகாரி ஒசாமா அப்துல் ஜப்பாரை ஈராக்கிய தீவிரவாதிகள் பிணையாளிகளாகப் பிடித்தனர்.

# மாற்றுப் பயிர்ச்செய்கை வயல்விழா

(முல்லை)

ஒலுமடுப்பிரதேச தச்சடம்பன் கிராமத்தில் மாற்றுப்பயிர்ச் செய்கை, வயல்விழா நேற்று முன்தினம் முல்லை மாவட்ட பிரதி விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.கோகுலதாசன் தலைமையில் ஆரம்பமானது.

முல்லை மாவட்டத்தில் நெல் வயலில் சிறுபோகத்தில் மாற்றுப் பயிர்ச்செய்கையினை மேம்படுத்தும் நோக்கில் பயறு, கௌப்பி, நிலக்கடலை என்பன சுமார் 225 ஏக்கரில் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் முல்லை மாவட்ட விவசாய திணைக்களத்தினரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் இணைந்து செயல்படுத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்புரையினை ஒலுமடுப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் தயா நிகழ்த்தினார்.

தலைமையுரையைத் தொடர்ந்து தானியங்கள் விற்பனையினை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா-சுகுமாா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து இம் மாற்றுப்பயிர்ச் செய்கையின் வெற்றி தொடர்பாக ஒலுமடுப் பிரதேச விவசாயப் போதனாசிரியர் எம்.லக்ஸ்மன் நிகழ்த்தினார்.

சிறப்புக் கருத்துக்களை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், ஒட்டுசுட்டான் பிரதேச உதவி அரச அதிபர் திருமதி. என்- செல்வராசா, ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டுப் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் சண்முகராசா, முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சுப்பிரமணியம், தச்சடம்பன் கமக்கார அமைப்புத் தலைவர் மகேந்திராசா நிகழ்த்தினார். முதன்மை உரைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் கரிகாலன், முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா- சுகுமார் ஆகியோரும் வழங்கினார்கள். (20)


வட்டக்கச்சி சிவிக்சென்ரர் பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கிவரும் உபதபாலகத்தையே படத்தில் காண்கிறீர்கள். 97இல் சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து, கடந்த ஏப்பிரலில் மீள இயங்கத் தொடங்கிய மேற்படி உபதபாலகத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் பல இன்னமும் நிறைவு செய்யப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# உலக சந்தையில் எண்ணெய் விலையை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது

*- சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ*

உலக சந்தையில் அதிகரித்து வரும் எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லாத அதே சமயம் பொது மக்களுக்கான சகலவிதமான சேவைகளை வழங்கவும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் பணி புரியும் என்று பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். அரசாங்கம் பதவிக்கு வந்த சொற்ப காலத்தினுள் பொதுமக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பல அபிவிருத் தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அதே வேளை அச்சமற்ற ஒரு சூழ்நிலையை நாட்டில் உருவாக்கு வதே சனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் நோக்கமாகும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சிவகுரு வாணிபமும் TVS மோட்டார் கம்பனியும்

இணைந்து நடாத்தும்

TVS

TVS Centra

### மாபெரும் இலவச சுத்திகரிப்பும் TVS சென்ரா அறிமுகமும்

VTI தொழில்நுட்பம் கொண்டது லீற்றருக்கு 100 Km ஓடக்கூடியது



இடம்: சந்திரன் பூங்கா (பாண்டியன் சுவையூற்று முன்பாக)
யாழ்சாலை கிளிநொச்சி

காலம்: 26-08-2004

வன்னிப் பகுதி அனைத்து TVS உந்துருளி பாவனையாளர்களும் 25-08-2004க்கு முன் சிவகுரு வாணிபத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

**சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்**

நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன் கிளிநொச்சி.

(சி-9985)

## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

### பொதுக்கூட்ட அழைப்பிதழ்

அன்புடையீர்,

தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னியின்-பொதுக்கூட்டம் வரும் 25.08.2004 புதன் பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் தலைவர் திரு.சு.மனோகரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. உறுப்புரிமைபெற்ற உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

*அகவணக்கம்
*தலைவர் உரை
*செயலாளர் அறிக்கை
*பொருளாளர் கணக்கறிக்கை
*உரிமையாளர்களின் கருத்துக்கள்
*பிறவிடயங்கள்
*நன்றியுரை


சு.மனோகரன்,
தலைவர்.

த.ஜெகதீஸ்வரன்,
செயலாளர்.

(4982)

## தமிழீழ போக்குவரவுக் கழகத்தில் பருவகாலச் சீட்டுப் பெற்று பயணம் செய்வோர் கவனத்திற்கு

கடந்த காலங்களில் தமிழீழ போக்குவரவுக்கழகத்தில் பருவகாலச்சீட்டுப் பெற்று பயணம் செய்வோருக்கு மட்டும் தொடர்ந்தும் சீட்டுக்கள் வழங்கப்படும். இப்பருவ காலச்சீட்டுக்கள் ஒவ்வொரு மாதமும் 25ஆம் நாள் தொடக்கம் 30ஆம் நாள் வரை **முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பளை, கிளிநொச்சி, புளியங்குளம், மல்லாவி** ஆகிய இடங்களில் நேரக்கணிப்பாளரால் பேருந்து நிலையங்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வழங்கப்படும்.




புரட்டாதி மாதத்திலிருந்து புதிதாகப் பருவகாலச்சீட்டு வழங்குவது இடைக்காலத்திற்கு நிறுத்தப்பட்டுள்ளது. புதிதாக பருவகாலச்சீட்டு பெற விண்ணப்பம் செய்வோருக்கு சீட்டுக்கள் வழங்கப்பட மாட்டாது என்பதை அறியத் தருகின்றோம்.

தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-9799)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 21 □ 11 □ 1938

மறைவு: 22 □ 07 □ 2004

### அமரர் திரு.தருமலிங்கம் – இரத்தினேஸ்வரன்

எமது வித்தியாலய ஆசிரியர் திரு.இ.கார்த்திகேயன் அவர்களின் அன்புத் தந்தையார் திரு.த.இரத்தினேஸ்வரன் அவர்கள் இறையடி சேர்ந்த 31ஆம் நாளில் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் பங்குகொள் கிறோம்.

ஆசிரியர் ஒன்றியம்,
கிளி/கிளிநொச்சி ம.வி.
கிளிநொச்சி.

(சி-9798)

## யாழ்.வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் யாழ். வர்த்தகக்கண்காட்சி–2004

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் JAFFNA CHAMBER OF COMMERCE

### ஒகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் பங்குபற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்பநிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-10128)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

# மத்திய பிரதேச மாநிலத்தில் நெருக்கடி

# முதல்வர், அமைச்சரவை பதவி விலகல்

## பா.ஜ.க. அவசரமாகக் கூடி ஆராய்வு

(போபால்)

**மத்திய பிரதேச முதலமைச்சர் உமாபாரதி நேற்று முன்தினம் திடீரென பதவியை ராஜினாமாச் செய்தார். பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் வெங்கையா நாயுடுவுக்கு ராஜினாமாக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்தார்.**

குற்றப் பின்னணி கொண்ட மத்திய மந்திரிகளை பதவி நீக்கம் செய்ய வற்புறுத்தி பா.ஜனதா கூட்டணிக் கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. இதனால் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் பல நாட்கள் முடக்கப்பட்டன. இதற்கிடையில் 30 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கொலை வழக்கு ஒன்றில் மத்திய நிலக்கரி துறை மந்திரியாக பொறுப்பு வகித்த சிபுசோரனுக்கு ஜார்க்கண்ட் மாநில நீதிமன்று பிடியாணை பிறப்பித்து இருந்தது.

எதிர்க்கட்சிகளின் போராட்டம் காரணமாக சிபுசோரன், மந்திரி பதவியை ராஜினாமாச் செய்து நீதிமன்றில் சரணடைந்தார். இதேபோல் கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ள ராஷ்டிரீய ஜனதா தளத்தைச் சேர்ந்த தஸ்லிமுதீன் உள்ளிட்ட வேறுசில மத்திய மந்திரிகளையும் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று பா.ஜனதா கூட்டணிக் கட்சிகள் வற்புறுத்தி வந்தன.

இந்த நிலையில் மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் உமா பாரதிக்கு எதிராக கர்நாடக மாநில ஹுப்ளி நீதிமன்று பிறப்பித்த "பிடியாணை" உத்தரவு பா.ஜனதாவுக்கு புதிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. 1994 ஆம் ஆண்டில் ஹுப்பிளியில் தடையை மீறி தேசியக் கொடியை ஏற்றிவைத்து கலவரத்தை தூண்டியதாக உமாபாரதி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் உமாபாரதிக்கு பிறப்பிக்கப்பட்ட கைது உத்தரவு இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. உமாபாரதியை பதவி நீக்கம் செய்யக்கோரி பாராளுமன்றத்தில் இரு சபைகளிலும் காங்கிரஸ் உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். இந்த விவகாரம் குறித்து டில்லியில் இன்று நடைபெறும் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி மன்றக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட இருந்தது. இந்த பிரச்சினையில் புதிய திருப்பமாக உமாபாரதி தனது பதவியை 'திடீர்' என்று ராஜினாமா செய்துவிட்டார். ராஜினாமாக் கடிதத்தை பா.ஜனதாத் தலைவர் வெங்கையா நாயுடுவுக்கு அவர் அனுப்பி வைத்திருக்கிறார். இந்நிலையில் அவரின் அமைச்சரவையில் அங்கம் வகித்த 24 அமைச்சர்களும நேற்று பதவி விலகியுள்ளனர்.

## 31இல் தாக்கல்

மக்களவைத் தேர்தலின்போது தமிழகத்தில் வாக்காளர் குளறுபடி நடந்ததாக வந்த புகாரையடுத்து கேரள தேர்தல் அதிகாரி தாமஸ் தமிழகத்தில் வாக்காளர் குளறுபடி குறித்து விசாரிக்க தேர்தல் ஆணையகத்தால் நியமிக்கப்பட்டார். அவர் தன்னுடைய விசாரணை அறிக்கையை வரும் 31ஆம் திகதி தாக்கல் செய்வார்.

## ஆதரவை விலக்க நிர்ப்பந்தம்

(ஜாம்ஜெட்பூர்)

மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறுங்கள் என்று ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவுக்கு ஜே.பி.பி. தலைவர் நெருக்கடி கொடுத்து வருகிறார்.

1975 ஆம் ஆண்டு சிருதிக் படுகொலை தொடர்பாக ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் சிபுசோரன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக அவர் தனது மத்திய அமைச்சர் பதவியையும் இராஜினாமாச் செய்துவிட்டார். இந்நிலையில் மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி ஜார்க்கண்ட் மக்கள் கட்சி (ஜே.பி.பி) சிபுசோரனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## நீரில் மூழ்கிய சிறுமியுடன் மீட்க முயன்றமூவர் மரணம்

(சென்னை)



தமிழ்நாடு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயங்கிவரும் ஒரு ஆதரவற்றோர் இல்லத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட நான்குபேர் நேற்று முன்தினம் ஏரியில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவ்விடுதியில் குழந்தைகள் காப்பாளராக பணிபுரிந்த புஸ்பா என்பவர் அங்குள்ள 15 சிறுவர்களை அருகிலுள்ள ஏரிக்கு குளிப்பதற்காக அழைத்துச் சென்றுள்ளார். அப்போது சௌமியா என்ற சிறுமி கால் தவறி தண்ணீரில் வீழ்ந்தமையால் பதற்றமடைந்த புஸ்பா அச் சிறுமியை காப்பாற்ற தண்ணீருக்குள் குதித்துள்ளார். அதனைத் தொடர்ந்து வேலன் சதீஸ் என்ற சிறுவர்களும் தண்ணீருக்குள் குதித்துள்ளனர். ஆனால் அவர்களுக்கும் நீச்சல் தெரியாததால் நான்கு பேரும் தண்ணீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் உயிரிழந்த புஸ்பா காது கேட்காத மற்றும் வாய்பேச முடியாதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியதொழில் நுட்பத்துடன் உருவான முதல் பயணிகள் விமானம் நேற்றுப் பறப்பு

(பெங்களூர்)



இந்தியத் தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட முதல் பயணிகள் விமானமான சரஸ் விமானம் பெங்களூரில் வெற்றிகரமாக பறக்கவிடப்பட்டது. சரஸ்விமானம் 20 நிமிடங்கள் வானில் பறந்தது. இதனை மத்தியமைச்சர் கபில்சிபில் பார்வையிட்டார்.

14 இருக்கைகளைக் கொண்ட இவ் விமானம் ஒரு மணித்தியாலயத்தில் 550 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக்கூடியது. இது ஏற்கனவே சோதனை செய்யப்பட்ட போதிலும் அதிகாரபூர்வமாக நேற்று சோதனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி அபிவிருத்திக்காக செயற்கைக்கோள் அனுப்ப முடிவு

(பெங்களூர்)

இந்தியா கல்விக்கென்று தனிச் செயற்கைக் கோளொன்றினை அடுத்தமாதம் 20 ஆம் திகதி விண்ணில் ஏவவுள்ளது. இந்த செயற்கைகோள் சென்னைக்கு அருகேயுள்ள ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி மையத்திலிருந்து விண்ணில் ஏவப்படவுள்ளதாக இஸ்ரோ தலைவர் மாதவன் நாயர் நேற்று முன்தினம் பெங்களூரில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இந்த செயற்கைக்கோளின் மூலம் நாட்டின் தொலைதூரக் கல்வித்திட்டம் மேம்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து வூலா சாதனை

(சென்னை)



தலைமன்னாரையும் இந்திய தனுஷ்கோடியையும் இணைக்கும் 40 கிலோமீற்றர் பாக்கு நீரிணையை இந்திய நீச்சல் விராங்கனை வூலா சௌத்திரி நேற்று முன்தினம் நீந்திக் கடந்துள்ளார்.

மன்னாரில் கடந்த வெள்ளியன்று அதிகாலை 2.30இற்கு நீந்தத் தொடங்கிய அவர் 13 மணித்தியாலம் 52 நிமிடங்கள் வரை நீந்தி தனுஷ்கோடியை மாலை 4 மணிக்கு அடைந்துள்ளார்.

## லொறி உரிமையாளர் போராட்டத்தை தடுக்க 'எஸ்மா' பயன்படுத்த உத்தேசம்!

(புதுடில்லி)

லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் தேவையற்றது என்றும் அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் எஸ்மாவைப் பயன்படுத்தி இந்த வேலை நிறுத்தத்தை மாநில அரசுகள் சமாளிக்கும் என்றும் மத்திய கப்பல்துறை மற்றும் வீதி போக்குவரத்து அமைச்சர் ரி.ஆர்.பாலு கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் உளுந்தூர்பேட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளாதவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

மத்தியரசின் 10 சதவீத சேவைவரி விதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து லொறி உரிமையாளர்கள் நேற்று முன்தினம் முதல் காலவரையறையற்ற போராட்டம் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிமாநிலங்களுக்குச் செல்லும் லொறிகளின் எண்ணிக்கையில் பாதிப்பு இருப்பதாகவும், குறிப்பாக ராஜஸ்தான் மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், ஒரிஸா ஆகிய மாநிலங்களில் முழு அளவில் வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது.

குஜராத், டில்லி மாநில அரசுகள் எஸ்மா சட்டத்தைப் பயன்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## ஆதனவரி அறவீடு பற்றிய அறிவித்தல்

### கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை-முல்லைத்தீவு

பொது மக்களின் நன்மை கருதி அவர்களுக்கான சேவையை மேம்படுத்தும் நோக்கமாக கரைதுறைப்பற்றுப் பிரதேசசபையின் ஆதனவரி அறவீடு 2004ஆம் ஆண்டு 4ஆம் காலாண்டில் இருந்து (2004 ஒக்ரோபர் முதல்) நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் தெரியப்படுத்துகின்றேன். ஏற்கனவே ஆதனவரி அறவீடு செய்யப்பட்ட முள்ளியவளை உப அலுவலகம், முல்லைத்தீவு பட்டண உப அலுவலக நிர்வாகப் பிரதேசங்களில் வசிப்பவர்களை தங்களுக்கான ஆதனவரியை மேற்குறித்த காலத்தில் இருந்து செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

01. முல்லைத்தீவுப் பட்டண உப அலுவலக நிர்வாகப் பிரதேசத்தில் வசிப்பவர்களை தங்கள் ஆதனவிபரங்களைப் பதிவுசெய்து ஆதனவரியையும் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்
02. முள்ளியவளை உப அலுவலக நிர்வாகப் பிரதேசத்தில் ஆதனவரி செலுத்துபவர்களை முள்ளியவளை உப அலுவலகத்தில் தத்தமது நிலுவைகளைப் பார்வையிட்டு வரியைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*(இ. கிருஷ்ணபிள்ளை)*
*செயலாளர்,*
*கரைதுறைப்பற்று பிரதேசசபை,*
*முல்லைத்தீவு.*

*(சி-10086)*

## ௩௦ ஆம் நாள் நினைவில் நனைகின்றோம்

அன்னை மடியில் 04 ☆ 12 ☆ 1975



ஆண்டவன் பிடியில் 26 ☆ 05 ☆ 2004

### அமரர் செல்வி தனுக்கோடி யோகேஸ்வரி
(ஆசிரியர்)

**நீ கூடியிருந்து முற்றத்தில்**
**குதுகலமாய் பேசுவாய்**
**நித்தமும் உன் பேச்சு இழந்து**
**போனதம்மா 'நாங்கள்**
**நினைவிழந்து தவிக்கின்றோம்**
**நீ இல்லையே எம்மோடு**
**உன் நினைவு எம்மைவிட்டு அகலாதம்மா.**

இல.159 சில்வாவீதி,
வட்டக்கச்சி.

*(4986)*

உன் பிரிவால் வாடும்
தாய், சகோதரர்கள்.

## எதென்ஸ்-2004

நேற்றைய போட்டிகளில் சில...



படகுப் போட்டியில் தங்கம்,வெள்ளி வென்ற அமெரிக்க வீரர்களுடன் வீராங்கனைகளும்.



பெண்களுக்கான ஒற்றையார் டென்னிஸ் போட்டியில் தங்கம் வென்ற பெல்ஜியததின் ஹெனின்




படகு வலித்தல் போட்டியில் வெண்கலம் வென்ற இத்தாலிய வீராங் கனைகள்.

சொய்ஸா அபார பந்து வீச்சு

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் சிறிலங்காவுக்கு வெற்றி

சிறிலங்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் 37 ஓட்டங்களால் மிக இலகுவான வெற்றியைப் பெற்றது சிறிலங்கா.



எஸ்.எஸ்.சி மைதானத் தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 9 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

முதலில் விரைவாக விக்கெட்டுக்கள் சரிய ஆரம பித்ததன் காரணமாக 86 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட நிலையில் சங்கக்கார, உபுல்சந்தன ஆகியோரின் நின்று நிலைத்த ஆட்டத்தால் மேற்படி ஓட்ட எண்ணிக் கையை பெற்றது. இருவரும் இணைந்து 6 ஆவது விக்கெட் இணைப் பாட்டமாக 93 ஓட்டங்களைக் குவித்தனர்.

சங்கக்கார 63,சந்தன ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணி களத்தடுப்பில் விட்ட 8 தவறுகளினாலேயே சிறிலங்கா இவ் ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருந்தது.

பந்து வீச்சில் கலிஸ் 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு இலகுவான வெற்றி இலக்கை நோக்கி ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்கா இன்று திருமணப் பந்தத்தில் இணையவுள்ள வேகப்பந்து வீச்சாளர் சொய்ஸாவின் துல்லியமான பந்து வீச்சுக்கு தனது ஆரம்ப விக்கெட்டுக்களை சொற்ப ஓட்டங்களுக்கு பறிகொடுத்தது அவர் 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

விரைவாக விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட போதும் போலக், டொமினி, குளூஸ்னர் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி தென்னாபிரிக் காவை கௌரவமான தோல்விக்கே இட்டுச் செல்ல முடிந்தது.

பந்துவீச்சில் டில்சானும் நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.இவ்வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0என்ற நிலையில் சிறிலங்கா முன்னிலையில் உள்ளது.

மூன்றாது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் தம்புள்ளரிங்கிரி மைதானத்தில் பகல்-இரவு போட்டியாக நடைபெறவுள்ளது.

## எதென்ஸ்-2004

நேற்றைய போட்டிகளில் சில...



ஆண்களுக்கான இரட்டையர் ரெனிஸ் ஆட்டத்தில் தங்கம் வென்ற சிலியின் பெர்னாண்டோ கொன்ச லெஸ், நிக்கொலஸ மஸ்சு தமது பதக்கங்களுடன்



ஆண்களுக்கான படகு வலிகும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற அவுஸ்திரேலியாவின கினென்லொவஸ், அன்ரனி எட்வர்ட்,பெண்கியூரென், ஸைமன் பர்கஸ் (இடமிருந்து வலமாக)




காட்சிப் பாய்தலில் முதலாவது சுற்றில் பிரிட்டனின் நைகஸ்கெல்ரன் ஒரு வேலியை பூரணபபடுத்துகிறார்.

## 2ஆம் இடம்

சிறிலங்கா கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக பெற்றுவரும் வெற்றியினால் ஐ.சி.சி தரவரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. சிறிலங்காவுடன் ஏற்பட்டுவரும தொடர் தோல்வியால் தென்னாபிரிக்கா 2ஆவது இடத்திலிருந்து 4ஆவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது. 2 ஆவது இடத்தில் இருந்த நியூசிலாந்து மூனறாம இடத்துக்குப் பின்தள்ளப் பட்டுள்ளது.


# மும்முனைத் தொடரில் இருந்து விலகினார் இந்தியாவின் நட்சத்திர வீரர் டெண்டுல்கர்

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட்போட்டிக்கான அணியில் இருந்து டெண்டுல்கர் காயத்தால் விலகினார். இந்தியா,பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நெதர் லாந்தில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான முதல் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக இந்தியா அணிக்கு மிகப்பெரிய சோதனை ஏற்பட்டது. நம்பிக்கை நாயகன் டெண்டுல்கர் காயம் காரணமாக இந்தப் போட்டியில் இருந்து நீக்கப் பட்டார். டெண்டுல் கரிடம் பரிசோதனை நடத்திய மருத்துவர் ஓய்வு எடுப் பதே சிறந்தது என்று கூறிவிட்டார்.

# தேசத்தின் பெருமையைத் தாழ்த்திவிட்டோம்

பயஸ்

"இந்திய மக்கள் எங்கள் மீது அதிகமான எதிர்பார்ப்பு வைத்திருந்தனர். அந்த எதிர்பார்பபை நாங்கள் நிறைவேற்றத் தவறிவிட்டோம் தேசத்தின் பெருமையை தாழ்த்திவிட்டோம்" என்று லியாண்டர் பயஸ் கூறியுள்ளார். ஒலிம்பிக் விளையாட்டில் இந்திய டெனிஸ் இரட்டையர்கள் தங்கப் பதக்கம் வெல்வார்கள் என்று எதிா பார்க்கப்பட்டது. இதற்கு ஏற்றாற் போல் தொடக்கத்தில் அசத்த லான வெற்றிகளைக் குவித்த லியாண்டர் மற்றும் மகேஷ்பூபதி ஜோடி அரையிறுதி வரை எளிதாக முன்னேறியது. அரையிறுதியில் ஜேர்மனி ஜோடியிடம் யாரும் எதிர்பாராத வகையில் தோற்றது. இதனால் வெண்கலப் பதக்கத்துக்கு குரேஷிய நாட்டைச்சேர்ந்த மரியோ அன்சிக் மற்றும் ஜுபிசிக் ஜோடியை எதிர்த்து இந்திய வீரர்கள் மோதினர்.



முதல்செட்டை 6-7என்ற புள்ளியில் இழந்த இந்திய வீரர்கள் , 2 ஆவது செட்டை 6 - 4 என்ற புள்ளியில் கைப் பற்றினர். பரபரப்பு மிகுந்த கடைசி செட்டில் இந்திய வீரர்கள் 14-16 என்ற புள்ளியில் தோல்வி கண்டனர். ஆட்டக்காரரான மகேஸ் பூபதியும் இதேமாதிரித் தனது வருத்தத்தை தெரிவித்தார்.








பெண்களுக்கான 75 கிலோ பளுதூக்குதல் பிரிவில் சீன வீராங்கனை டாங்காங்ஹாம் தங்கப் பதக்கம் வென்றார்




அதிவேகப் பெண்மணி, மரதன் ஓட்ட வீராங்கனை என வரலாற் றில் சாதனை படைத்த பவுலா ராட்கிளிவ்.



ஆண்களுக்கான மேசைப் பந்து ஒற்றையர் ஆட்டத்தில் சுவீடனின் யான் ஓவ்வோல்டரை அரையிறுதி ஆட்டத்தில் தோற்கடித்ததைக் கொண்டாடும் தென் கொரியாவின் மின்சுவாஸ்றே.

## மேன்முறையீடு செய்யமாட்டார்

-இஷான் கபில

கென்ய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் ஒடும்பே தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை தொடர்பாக மேன்முறையீடு செய்யமாட்டார் என அவரது வழக்கறிஞரான இஷான் கபில தெரிவித் துள்ளார்.

கென்ய கிரிக்கெட் சபையினரில் தடையுத்தரவை எதிர்த்து மேன்முறையீடு செய்ய கிரிக்கெட் விதிமுறை அனுமதிக் கவில்லை என சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதாகவும் கபில தெரிவித்துள்ளார்.

## தங்கம் வென்றார் பெலாறுஸ் வீராங்கனை

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் பெலாறஸ் வீராங்கனை யூலியா நெற்சண்டோ தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.

இவர் 10.93 செக்கன்களில் 100 மீற்றர் தூரத்தை ஓடி முடித்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

வெள்ளிப் பதக்கத்தை அமெரிக்காவின் டொரின் வில்லியமும்,வெண்கலப் பதக்கத்தை ஜமேக்காவின் கம்பலும் தட்டிச் சென்றனர்.

# அமெரிக்க வீரர் பெல்ப்சுக்கு ஆறாவது தங்கப் பதக்கம்



ஒலிம்பிக் நீச்சல் போட்டிகள் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது. இதன் போது பிரபல அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் தனது ஆறாவது தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.


இம்முறை ஒலிம்பிக் போட்டியில் பெல்ப்ஸ் ஆறு தங்கம், 2வெண்கலப் பதக்கம் அடங்கலாக மொத்தம் 8 பதக்கங்களை வென்றார்.

ஆண்களுக்கான 4x100 மீற்றர் மெட்ஸி அஞ்சல் நீச்சல் போட்டியிலேயே பெல்ப்ஸ் தனது ஆறாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

# இந்திய ஹொக்கி அணியின் பதக்க கனவு முடிவுக்கு வந்தது



24 ஆண்டுகளுக்குப் பிறகு ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும்இந்தியாவின் ஆசை நிராசையானது. எதென்ஸ் ஒலிம்பிக் ஆடவர் ஹொக்கி "பி" பிரிவில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நியூசிலாந்து அடித்த கோலால் அரையிறுதிக்கு நுழையும் வாய்ப்பை இழந்தது. இந்தியா சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்தியா 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது. இந்த ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் நியூசிலாந்தின் பிலிப்புர்ரோஸ் கோல் அடித்து அணிக்கு முன்னிலை பெற்றுத்தந்தார். அதன் பிறகு 62 ஆவது நிமிடத்தில் மூத்த வீரர் தன்ராஜ்பிள்ளை கோல் அடித்து அதைச் சமன் செய்தார். ஆட்டம் முடிய சில நிமிடங்கள் இருந்த நிலை யில் நியூசிலாந்து பனால்டி கோணர் மூலம் மேலும் ஒரு கோல் போட்டு வெற்றி பெற்றது.



### சிந்தனைக்கு

வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் தான் நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-08-2004

மின் அஞ்சல் Daily@ eezhanatham. com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## நிர்ப்பந்திப்பு!

மட்டக்களப்பு காயாங்கேணி இராணுவ முகாமிற்கு அருகே புல்லாவிச் சந்திபில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது ஒரு யுத்த நிறுத்த மீறல் சம்பவம் என்பதற்கும் அப்பால் புரிந்துணர்வு உடன்பாட்டின் செயற்பாட்டைப் பெரும் கேள்விக்குள்ளாக்கும் ஒரு செயல் என்பதைச் சிறிலங்கா அரசும் சரி, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சரி புரிந்துகொள்ளுதல் அவசியமானதாகும்.

ஏனெனில், புரிந்துணர்வு உடன்பாட்டின்படி விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் ஈடு பட்டுள்ளனர். இவர்கள் நிராயுத பணிகளாகவுள்ளனர். இவர்களின் பாதுகாப்பிற்கு சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பும், அரசாங்கமுமே முழுப் பொறுப்புமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பெரிய தாக்குதல் இதுவாகும். ஏற்கனவே, மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதி சுட்டுக் கொல்லப்பட்டார். தற்பொழுது சிரேஷ்ட உறுப்பினர்களான பாவா, யோகா ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தை அனுப்பத் தயங்கப் போவதில்லை எனக் கூறிகொண்டிருக்கையில் இத்தகைய படுகொலைச் சம்பவங்கள் இடம் பெறுகின்றமையானது யுத்தம் ஒன்றிற்கு அரசாங்கம் செல்வதற்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டு வருவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் இராணுவத் தரப்பின் ஒத்துழைப்பின்றியோ, ஆயுதப் படைத் தரப்பிற்குத் தெரியாமலோ மேற்கொள்ளப்படுவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்று. இதேவேளை, ஆயுதப் படைத்தரப்போ, அன்றி அரசாங்கமோ இதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறுவது ஏற்புடைய விளக்கமாகக் கொள்ளத்தக்கதும் அல்ல. அத்தோடு, இத்தகைய பதில்கள் நீண்ட நாட்களுக்கு அமைதி காக்க உதவவும்மாட்டாது.

சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு "தாக்குதல் நடத்தியவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள், யார் என அடையாளம் காண முடியவில்லை" எனக் கூறுவது சிறுபிள்ளைத் தனமானது மட்டுமல்ல, சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பு மற்றும் புலனாய்வுத்துறையைக் கேலி செய்வ தாகவுமே இருக்கும். ஏனெனில், இப்படுகொலைகளுடன் சம்பந் தப்பட்டவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து வெளியில் எங்குமே சென்றுவிட முடியாது.

இந்நிலையில், ஆயுதப் படைத் தரப்போ அன்றி அரசாங்கமோ இத்தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டறிய முடிய வில்லை எனக் கூறுவதும், தமக்கும் இதற்கும் தொடர்பில்லை எனத் தெரிவிப்பதும் அவர்களைக் கண்டறியவும், கைது செய்யவும் விடுதலைப்புலிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையையே வலுவடையச் செய்யும். அத்தோடு, இனிமேலும் அத்தகைய சம்பவங்கள் நடைபெறாது பாதுகாக்க புலிகள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும் என்ற கோரிக்கைகளையும் எழ வைக்கும்.

அத்தகையதொரு வாய்ப்பு அளிக்கப்படாதுவிட்டால், புரிந்துணர்வு உடன்பாடும், யுத்த நிறுத்தமும் விரைவில் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். புரிந்துணர்வு உடன்பாட்டை முறித்துக் கொள்வதும், யுத்தத்தை ஆரம்பிப்பதுமே அரசின் நோக்கம் என்பது புரியக்கூடியதாக இருப்பினும், அமைதி காக்கப்பட வேண்டும் என்பதற்காகப் புலிகள் எத்தனை போராளிகளின் உயிர் களைப் பறிகொடுக்க முடியும் என்பது கேள்விக்குரியதொன்று.

இதேவேளை, விடுதலைப்புலிகள் படுகொலைகளைத் தவிர்ப் பதற்கென தமது அரசியல் பணிகளை இடைநிறுத்தி வைப்ப தென்பதும் சாத்தியப்பாடானதொன்றல்ல. அவ்வாறு ஒரு சிந்தனை அரசாங்கத்திற்கு இருப்பின், இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங் கைக்குள் தீர்வு என்ற நோக்கத்தை அரசு கைவிட வேண்டிய தாகவே இருக்கும்.

இதேசமயம், விடுதலைப்புலிகள் மீது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடாத்தப்படும் தாக்குதல்கள் குறித்து கண்காணிப்புக் குழு உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்காமல் இருப்பது அதன் நோக்கத்தையே அர்த்தமற்றதாக்கிவிடும். அதாவது, யுத்த நிறுத்த உடன்பாட்டில் கையொப்பம் இட்ட இரு தரப்பில் ஒரு தரப்பின் மீது மற்றத் தரப்பினாின் பகுதிக்குள் தொடர்ச்சியான தாக்குதல் நடாத்தப்படும்போது அதனை குற்றவியல் செயற்பாட்டிற்குள் உள்ளாக்குவதானால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஏன் என்ற கேள்வி எழலாம். அது தனது பணியைச் சரியான முறையில் மேற்கொள்கின்றதா? அதன் பயன்பாடு என்ன? என்பது போன்ற வினாக்களுக்குப் பதிலளிப்பது கடினமாகிவிடும்.

ஆகையினால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் சரி, அதற்கு வெளியிலும் சரி விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்களில் அரசாங்கமோ, ஆயுதப் படைத்தரப்போ அக்கறை காட்டுமேயானால் அதன் விளைவுகள் தற்பொழுது கேள்விக்குள்ளாகியுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் போன்று யுத்த நிறுத்தத்தையும் ஆக்கி விடும். அரசு விரும்புவது அதுவே ஆயினும், புலிகளுக்கு அது தவிர்க்க முடி யாத நிர்ப்பந்தம் ஆகிவிடும்.

# ஆட்பதிவுத் திணைக்களத்தின் நிலை தன்னைத் திடுக்கிடவைத்ததாம்

### அமைச்சர் திலக்ரணவிராஜா கூறுகிறார்

ஆட்பதிவுத்திணைக்களத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பான மந்திரிசபை அறிக்கை ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்ட அமைச்சர் திலக் ரணவிராஜா கூறியுள்ளார். ஆட் பதிவுத் திணைக்களத்திற்கு நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்த பரிசோதனை விஜயத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் கூறுகையில்;

இது போன்ற ஒரு முக்கிய காரியாலயத்தின் நிலைமைகள் தன்னைத் திடுக்கிடவைத்ததாகவும் குறிப்பிட்டார். நவீனகாலத்துடன் ஒப்பிடும் போது இந் நிலைமைகள் முந்தய காலங்களிலும் மிகவும் குறைவாக இருப்பதாகவும் அவர்குறிப்பிட்டார். இந்நிலைமை தொடர்பாக ஆச்சரியப்பட ஒன்று மில்லை எனவும் இத்திணைக் களத்துடன் தொடர்புபட்ட நிரூபிக் கப்படாத லஞ்சகுற்றச் சாட்டுக்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் அப்பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது நன்கு திருத்தியமைக்கப்பட்ட ஒரு பூரண திணைக்களத்தையே தான் காண விரும்புவதாகவும் குறிப்பிட் டார். சனாதிபதியும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக கடமை யாற்றுவதோடு லஞ்ச ஒழிப்பில் ஆர்வமாக உள்ளதாகவும் குறிப் பிட்டார். ஒரு நாளில் தேசிய அடை யாள அட்டையான அட்டை வழங்கல் முறை பல தீய செயல் களிற்கு வழிகோலும் எனவும் தான் அந்த நடைமுறையில் மாற்றத்தை மேற்கொள்ள விருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கம்பியூட்டர் மயப்படுத்தல், காரியாலயத்தைப் பொருத்தமான கட்டடம் ஒன்றினுள் மீளமைத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய மாற்றியமைத்தல் தொடர்பான மந்திரிசபை அறிக்கை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார். இத்திணைக் களத்தின் அனேகமான கட்டடங்கள் பாழடைந்த நிலைமையில் உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

அவர் இத்திணைக்களத்திற்கு நிரந்தரமான வலயமைப்பு ஒன்று நிறுவப்படும் வரை புதிய அடை யாள அட்டைகள் வழங்கும் நட வடிக்கைகாக 40 கம்யூட்டர்களை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

# எண்ணெய்விலை அதிகரிப்பால் ஏற்பட்ட விளைவுக்கு அரசாங்கம் மீது ஐ.தே.க. குற்றம் சுமத்துகிறது

### ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வா கூறுகிறார்.

தற்போதைய அரசாங்கம் பொருளாதார முகாமைத்துவத்தில் அதன் திறமையை வெளிப்படுத்த வில்லையென்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்த குற்றச்சாட்டுக் களை மக்கள் விடுதலை முன்னணி நிராகரித்துள்ளது.

எண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்த முற்படுகிறதென்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா விடுத்த அறிக்கை யொன்றில் ஆட்சி நடத்திய சகல ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களும் எண்ணெய் விலை உயர்வினால் ஏற்படும் தாக் கத்தை மக்களை அனுபவிக்கச் செய்தன என்று அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 2001ஆம் ஆண்டில் எரிபொருள் மானியத்தை இரத்துச் செய்தது, உலக சந்தையில் எண்ணெய்யின் விலை சுமார் 50 டொலராக அதி கரித்துள்ள போதிலும் தற்போ தைய அரசாங்கம் எரிபொருள் மானிபத்தைத் தொடர்ந்து வழங்கு கின்றது.

இலங்கை ரூபாவின் பெறு மதியை ஸ்திரப்படுத்த அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வருகின்றது என்று ஜே.வி.பி செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் பின்னடையச் செய்யப்பட்ட பொரு ளாதாரத்தைச் சீரமைத்து முன்னேற் றுவதற்கு நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிரிக்கெட் வீரர் உபுள் சந்தன மீது சிறிலங்காப் படையினர் தாக்குதல்

(கொழும்பு)

சிறிலங்காவின் தேசிய கிரிக்கெட் அணியின் உறுப்பினர் உபுள் சந்தன இராணுவத்தினரால் மோசமாகத் தாக்கப்பட்டதை யடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது;

நேற்று முன்தினம் கொழும்பு விஜயராம சந்தியை நோக்கி காரில் சென்று கொண்டிருந்த சந்தனவை வேறொரு காரில் வந்த இரண்டு இராணுவ உத்தியோ கத்தர்கள் வீதியில் வைத்து மக்கள் முன்னிலையில் மோச மாகத் தாக்கியுள்ளனர்.

சந்தனவின் கார் தற்செயலாக வீதியின் குறுக்காக தவறான பக்கத் திற்குச் சென்றமையால் கோபம் கொண்டே குறித்த இரு இராணு வத்தினரும் அவரை கடுமையாகத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இத்தாக்குதலால் காயமுற்ற சந்தன கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் எனவும்,

இத்தாக்குதல் சம்பவம் குறித்து மிரிஹன பொலிசார் இராணுவ தலைமையகத்திற்கும், இராணுவப் பொலிசாருக்கும் அறிவித்துள் ளனர். என்றும் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# போதைப்பொருள் விற்பவர் பிலியந்தலையில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்த கத்தில் ஈடுபட்டு வந்த முக்கிய நபர் ஒருவர் நேற்று பிலியந் தலையில் வைத்து துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமடைந் துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

பிலியந்தலை - கொழும்பு வீதியில் மோட்டார் வாகனமொன் றில் பயணம் செய்து கொண்டி ருந்த போதே இவர் மீது துப்பாக் கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித் துள்ளனர். இந்நபர் கொழும்பு உட்பட அதனை அண்மித்த பகுதி களுக்கு போதைப் பொருட்களை விநியோகித்தவர் என்றும் கூறப்படுகின்றது.

இதே வேளை வெலிஓயா நிக் கொடுவைப் பகுதியில் வீடொன் றினுள் நேற்று முன்தினம் முற்பகல் வேளையில் கைக்குண்டுகள் சில வெடித்ததன் காரணமாக ஊர் காவற் படைவீரர் ஒருவர் உயிரிழந் துள்ளதாகவும், மற்று மொரு நபர் காயமடைந்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

# ஆசிய கலாசார நிகழ்வில் சிறி. அமைச்சர் பங்கேற்பு

ஆசியாவுக்கு உரிய கலாசாரத்தை ஏற்படுத்தும் வகையில் சீனாவில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற் பதற்காக கலாசார அமைச்சர் விஜித கேரத் தலைமையிலான குழு ஒன்று அங்கு சென்றுள்ளது.

இந்நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி ஆரம்பித்து எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இடம் பெறவுள் ளது. இதில் 14 நாடுகளின் கலா சார அமைச்சர்கள் பங்கேற்கின்ற னர். ஐரோப்பாவை அடையாளப் படுத்த கலாசாரம் இருப்பது போல, ஆசியாவையும் அடையாளப் படுத்த கலாசாரம் ஒன்று நிர் மாணிககப்பட வேண்டியது அவசியம் என்பதை இந்தமாநாட் டில் பங்கேற் போர் வலியுறுத்துவா என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பேச்சுவார்த்தைக்கு ஜே.வி.பி காட்டும் எதிர்ப்பு மீண்டும் யுத்த நிலைக்கே இட்டுச்செல்லும்

## சு.க அமைச்சர்கள் சிலர் சந்திரிகாவுக்கு தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு எதிராக ஜே.வி.பி யினர் தெரிவிக்கும் எதிர்ப்பு, மீண்டும் யுத்த நிலைக்கு நாட்டை இட்டுச் செல்வதாகவே அமையும் என ஆளும் கட்சி அமைச்சர்கள் சிலர் சந்திரிகாவிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

பேச்சுக்கள் நடைபெற முன்பு இவ்வாறு பிரச்சார வேலைகளில் ஈடுபடுவதால் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருவதில் பாரிய பிரச்சினை ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய முன்னணிக்குப் பலமான பங்காளிக் கட்சியாக இருப்பதால் ஜே.வீ.பி யினரின் இந் நடவடிக்கையால் நாடு மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தள்ளப்படும் எனவும், இதனைத் தடுக்க சனாதிபதி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்..

# ஆவணிமாத தமிழ் இசைவிருந்தில் சங்கீதபூசணம் கணபதிப்பிள்ளையின் இசை

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆவணி மாத தமிழ் இசை விருந்து நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி கலா மண்டபத்தில் நுண்கலைக்கல்லூரிகளின் பொறுப்பாளர் கண்ணதாசன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் சங்கீதன் ஜெறாஸ் அவர்களும், கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த சங்கீதபூசணம் சு.கணபதிப்பிள்ளை அவர்களும், சங்கீதரத்தினம் ம.சிவசிதம்பரம்(முன்னாள் விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) அவர்களும் ஏற்றி வைக்க, தேசியக் கொடியை போராளி தமிழின்பன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து அரங்க நிகழ்வாக இசைஅரங்கம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து தமிழிசை விருந்தாக சங்கீத பூசணம் கணபதிப்பிள்ளை அவர்களின் இசை நிகழ்வு இடம்பெற்றது (08)

# அமைச்சர் ரட்ணசிறி வவுனியா வருகை

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இன்று வவுனியாவிற்கும் மன்னாரிற்கும் வருகின்றார்.

இவர் சிறிலங்கா அதிகாரிகளையும் பாதுகாப்புப் படையினரையும் சந்திக்கவுள்ளார். பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றதன்பின்பு முதன்முறையாக இங்குவரும் இவர் இதன்போது பல்வேறு முகாம்களுக்கும் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# வரட்சி நிவாரணம் வழங்க திறைசேரியில் பணமில்லை

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கம் உறுதியளித்திருப்பதைப் போன்று நிவாரணம் எதையும் பெற மாட்டார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து சிறிலங்காவின் சமூக சேவைகள் அமைச்சு உத்தியோகத்தர்கள் தெரிவிக்கையில்,

வரட்சி நிவாரணத்திற்காக 685 மில்லியன் ரூபா தொகையை ஓகஸ்ட் 11 இல் அமைச்சரவை அங்கீகரித்திருந்த போதிலும், திறைசேரி இந்தப் பணத்தை வழங்குவதற்குத் தவறிவிட்டது. பணப்பற்றக்குறை காரணமாகவே திறைசேரி அந்நிதியை வழங்கவில்லை.14 மாவட்டங்களிலும் வரட்சியால் பாதிக்கப்பட்ட ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 685 மில்லியன் ரூபாய் நிதி முழுமையும் போதாமல் உள்ளது என தெரிவித்துள்ளனர்.

# குண்டுப்பொதி கண்டுபிடிப்பு

மட்டக்களப்பிற்கு வடக்கே 14 கிலோ மீற்றரில் உள்ள கடை ஒன்றின் முன் குண்டுப்பொதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

நேற்றுக்காலை (ஞாயிறு) 8.00 மணியளவில் ஏறாவூரில் கடை ஒன்றின் முன்னால் சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்றைக் கண்ட கடைக்காரர் ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து கொம்மாந்துறை இராணுவ முகாமின் குண்டகற்றும் பிரிவினர் அழைக்கப்பட்டு இப்பொதி அழிக்கப்பட்டதாகப் பொலிசார் கூறினர்.

# அரசின் வரவுசெலவுத் திட்டத்திற்கு மாற்று யோசனைகள்

## ஜே.வி.பி சமர்ப்பிக்குமாம்

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் அரசு சமர்ப்பிக்கும் வரவு செலவுத்திட்டத்திற்கு மாற்று யோசனைகளை நிதி அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்போவதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் ஆலோசனைகள் ஜே.வி.பி சமர்ப்பிக்கும் யோசனைகளில் அடங்கியுள்ளதாகவும், இதனால் விவசாயிகள், தொழிலாளர்கள், சமுர்த்தி நிவாரணம்பெறுவோர்கள் பெரும் பயனடைவார்கள் எனவும் ஜே.வி.பி அரசியல்பீடம் கூறியுள்ளது.

## பூரண...

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.பத்மநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு மற்றும் அரச அதிகாரிகள், பொது மக்கள் என பெருந் தொகையானோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

# அரச வாகனமொன்றை விற்க முயன்றதாக கைது

முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட செயலாளரினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனமொன்றை விற்க முயற்சி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாக பேராதனைப் பொலிஸார் விசாரணை செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த வாகனம் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்குச் சொந்தமானதாகும். இந்த வாகனம் களவாடப்பட்டு சில மாதங்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது பின்னர் அது வாகனத்தைத் தரகர் ஒருவரிற்கு விற்பதற்குக் கொண்டு சென்ற சமயம் பேராதனைப் பொலிசார் நேற்று முன்தினம் இதனைக் கைப்பற்றியுள்ளனர்.

வாகனத்தின் சாரதியினை கண்டி நீதவான் எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை இந்த முயற்சியின் பின்னணியிலிருந்த தனிப்பட்ட செயலாளரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

## வீரவணக்கம்....

கந்தர்மடம், யாழ்ப்பாணம்) என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# ஐ.தே.க ஆரம்பக் கட்டமைப்பில் மாற்றம் செய்ய முடிவு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்பக் கட்டமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை நோக்காகக் கொண்டு இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் சுமார் 10 ஆயிரம் சமூக குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் தொகுதி அமைப்பாளர்களாக புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (32)

## இலங்கைக்கு.....

இலங்கைக்குப் பொருளாதார உதவிகளை வழங்குவதா? இல்லையா? என்று தீர்மானிக்கவுள்ளதாகவும் அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளிலும் அபிவிருத்தி தொடர்பான நிதியுதவிகள் தொடர்பாக தாங்கள் தீர்மானிக்கவுள்ளதாகவும் இந்த வங்கிகள் தெரிவித்துள்ளன.(32)

## கொழும்புக்கு....

பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும், திடீர் சோதனைகளை நடாத்துமாறும், சனாதிபதி சந்திரிகா, சிறிலங்கா படைத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு சனாதிபதி சந்திரிகாவினால் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள், பின்னர் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களுக்கும், இராஜதந்திரிகளுக்கும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், சனாதிபதி செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# எதென்ஸ் ஒலிம்பிக் - 2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம | வெள்ளி | வெண்கலம | மொத்தம |
|---|---|---|---|---|
| சீனா | 22 | 14 | 10 | 46 |
| அமெரிக்கா | 20 | 20 | 14 | 54 |
| ஜப்பான் | 13 | 05 | 07 | 25 |
| அவுஸ்திரேலியா | 12 | 08 | 12 | 32 |
| ஜேர்மன் | 10 | 09 | 12 | 31 |
| பிரான்ஸ் | 08 | 08 | 07 | 23 |
| ரஷ்யா | 07 | 13 | 15 | 35 |
| இத்தாலி | 07 | 06 | 06 | 19 |
| உக்ரெயின் | 06 | 02 | 05 | 13 |
| ருமேனியா | 06 | 02 | 02 | 10 |
| தென்கொரியா | 05 | 10 | 05 | 20 |
| பிரிட்டன் | 05 | 07 | 07 | 19 |
| நெதர்லாந்து | 03 | 06 | 08 | 17 |
| கிரேக்கம் | 03 | 01 | 03 | 07 |
| துருக்கி | 03 | 00 | 01 | 04 |
| ஹங்கேரி | 02 | 04 | 01 | 07 |
| பெலாரஸ் | 02 | 03 | 05 | 10 |
| போலந்து | 02 | 02 | 03 | 07 |
| சிலோக்கியா | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 01 | 00 | 03 |
| தாய்லாந்து | 02 | 00 | 02 | 04 |
| சுவீடன் | 02 | 00 | 01 | 03 |
| நோர்வே | 02 | 00 | 00 | 02 |
| நியூசிலாந்து | 02 | 00 | 00 | 02 |
| கனடா | 01 | 02 | 01 | 04 |
| இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| தென்னாபிரிக்கா | 01 | 01 | 02 | 04 |
| சிம்பாவே | 01 | 01 | 01 | 03 |
| எதியோப்பியா | 01 | 01 | 00 | 02 |
| பல்கேரியா | 01 | 00 | 05 | 06 |
| டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| பிரேசில் | 01 | 00 | 02 | 03 |
| சிலி | 01 | 00 | 01 | 02 |
| சுவிற்சர்லாந்து | 01 | 00 | 01 | 02 |
| ஐக்கிய அரபுக்குடியரசு | 01 | 00 | 00 | 01 |

# இணையத் தளத்திற்கான கேபிளில் வெளிநாட்டுக்கப்பல் மோதியது

## இணையத்தளங்கள் செயலிழப்பு

இலங்கைக்கான இணையத்தளத்திற்கான கேபிள் ஒன்று கடலுக்கடியிலுள்ள நீர்மூழ்கிக்கப்பலொன்றிலே அதன் இயக்கம் உள்ளது. இது நேற்றுக் காலை முதல் முழுமையாகச்செயலிழந்துள்ளதாக சிறிலங்கா ரெலிக்கொம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இணையத்தளத் தொடர்புகள் இந்த நீர்மூழ்கிக்கப்பலில் பொருத்தப்பட்டுள்ளது. கொழும்புத்துறை முகத்திற்கு வந்த வேறொரு கப்பல் நங்கூரமிடும்போது கேபிளில் மோதியதன் காரணமாக கேபிள் உடைந்துள்ளது. இதனால் சிறிலங்கா ரெலிக்கொமுடன் தொடர்புடைய இணைத்தளங்கள் முழுமையாகச் செயலிழந்துள்ளன. இவ் ரெலிக்கொம் நிறுவனத்தின் சேவையினை இலங்கையில் 85,500 பேர் வரை பயன்படுத்துகின்றனர்.

தற்போதைய பாவனைக்காக சிறிலங்கா ரெலிக்கொம் ரி.எம்.லி.2 என்னும் கேபிளை செய்மதித் தொலைத் தொடர்பு ஊடாகப் பொருத்தியிருப்பினும் முழுமையான பயனைப்பெற முடியவில்லை. இதனைத் திருத்துவதற்கென இந்தியாவிலிருந்து ஒரு கப்பல் புறப்பட்டுள்ளதாகவும் அக்கப்பல் (செவ்வாய்க்கிழமை) நாளை கொழும்பை வந்தடையும் எனவும் அதன் பின்னர் தான் கேபிள் திருத்தியமைக்கப்பட்டு இச்சேவை உரிய முறையில் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்பது குறித்த விளம்பரத்திற்கு 100லட்சம் இழப்பு

ஜே.வி.பி.யினர் சிக்கனமாக செலவு செய்வது குறித்துப் பேசினாலும் விளம்பரத்துக்குப் பெருமளவுப் பணத்தைச் செலவிட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

10 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கையில் அது தொடர்பான விளம்பரங்களை அச்சிடுவதற்கு நூறு லட்சம் ரூபாவினை ஜே.வி. பி.யினர் இதுவரை செலவிட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

## பல்கலை....

தமது போராட்டத்தை மேற்கொண்டனர். அவர்கள் ஏந்திய சுலோக அட்டைகளில் "தமிழர்களே வருக! பாலும் நஞ்சும் கலந்த அப்பம் சுடச்சுடத்தரப்படும், சிறிலங்கா புலனாய்வுத்துறையினருக்கு அப்பக்கடை தேவையா?, எம்மினத்தை அழிப்பதற்கு இதுவும் ஒரு வழியா? தமிழர்களுக்கு மட்டும் போதைப்பொருள் கலந்த சுவையான அப்பமா?, அப்பத்தைக் காட்டி யாரை மடக்குகிறாய்? அழிவின் விளிம்பில் யாரை தள்ளுகிறாய்"

போன்ற வாசகங்கள் தாங்கிய சுலோக அட்டைகளை ஏந்திய யாழ். பல்கலைக்கழக மாணவர்களும்அப்பகுதி மக்களும் தமது போராட்டத்தை மேற்கொண்டனர். இராணுவத்தினர் தாம் இனி அப்ப வியாபாரத்தை நடத்த மாட்டோம் எனக் கூறியதன் பின்னர் மாணவர்களும் மக்களும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். இராணுவத்தினர் தமது வியாபார நிலையத்தை அகற்றும்செயற்பாட்டில் ஈடுபட்டனர். இதுபோன்ற வியாபார நிலையங்களை அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினர் நிறுவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (36)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.